# வானவில்

# VAANAVIL

இதழ் 138 | ஆனி 2022

ISSUE 138 | JUNE 2022


# சர்வதேச நிதி உதவி மட்டும் நிரந்தரத் தீர்வல்ல!

இலங்கைக்கு ஏற்பட்ட டொலர் தட்டுப்பாட்டால் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டதால், பொருட்களுக்கு தட்டுப்பாடும் விலையுயர்வும் ஏற்பட்டு, நாடு பெரும் பொருளாதார நெருக்கடியையும் மக்கள் பெரும் அவலங்களையும் சந்தித்து நிற்கின்றனர்.

இதன் காரணமாக பிரதமர் பதவி வகித்த மகிந்த ராஜபக்சவும் அவரது முழு அமைச்சரவையும் பதவி விலக வேண்டிய சூழல் உருவானது. அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரான அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதிய பிரதமராக நியமிக்கப்பட்டு புதியதொரு அமைச்சரவையும் பதவி ஏற்றது.

ரணில் பிரதமரானதும் நாட்டின் பொருளாதார நெருக்கடி தீர்ந்துவிடும் என பலர் நம்பினர். அதற்குக் காரணம், ஐக்கிய தேசியக் கட்சி அமெரிக்கா உட்பட மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளுக்கு ஆதரவான நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு கட்சி என்றபடியால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு அந்த சக்திகள் பார்த்தும் பாராமல் அள்ளிக் கொடுத்து விடுவார்கள் என்ற எதிர்பார்ப்பு பலரிடம் உருவாகி இருந்தது.

ஆனால் அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. அதற்குக் காரணம், இன்றைய உலகில் அமெரிக்கா, இந்தியா உட்பட பலமான பொருளாதாரம் கொண்டுள்ள நாடுகளே பண வீக்கம், விலைவாசி உயர்வு, பொருளாதார வீழ்ச்சி என்பனவற்றால்




அல்லாடிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு அவர்கள் தங்கள் சொந்தப் பிரச்சினைகளையே தீர்க்க முடியாமல் அவதிப்படுகையில் ரணில் விக்கிரமசிங்க தமது நண்பர் என்பதற்காக தம்மை ஒறுத்துக்கொண்டு அவருக்கு அவர்கள் எதையும் அள்ளிக் கொடுத்துவிடப் போவதில்லை. அதுவுமல்லாமல், தமக்கு எதாவதொரு பிரயோசனமும் இல்லாமல் முதலாளித்துவ நாடுகள் மற்றைய நாடுகளுக்கு உதவி செய்ததாக வரலாறும் இல்லை.

அதே நேரத்தில் நாட்டின் நிலைமையில் எந்தவிதமான மாறுதலும் இல்லாமல் மேலும் மேலும் நிலைமை மோசமடைந்து செல்வது, ராஜபக்சாக்கள்தான் நாடு இந்த நிலைமைக்குச் சென்றதற்கு காரணகர்த்தாக்கள் என எதிர்க் கட்சிகள் இட்டுக்கட்டிச் செய்த பிரச்சாரத்தையும் தவிடுபொடியாக்கி உள்ளது.

உண்மையில், நாடு இத்தகைய ஒரு நிலைக்கு உள்ளானதில் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அத்தனை அரசாங்கங்களுக்கும் பங்குண்டு. அப்படிப் பார்க்கையில் இன்று ராஜபக்சாக்களுக்கு எதிராக விரலை நீட்டும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தந்தையார் ஆர்.பிரேமதாச, சந்திரிக குமாரதுங்க, ரணிலின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன போன்றவர்களும் இன்றைய நாட்டு நிலைமைக்கு காரணகர்த்தாக்கள்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…

**நூறு சிந்தனை மலரட்டும்**

# அளவுக்கதிகமான வாகனப்பயன்பாடும் எரிபொருள் பிரச்சனையும்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இவ்வருடம் நான்காவது தடவையாக எரிபொருட்களின் (பெற்றோல், டீசல்) விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த விலையதிகரிப்புகள் உலகச் சந்தையில் எரிபொருள் விலையதிகரிப்புகளுக்கு ஏற்பவே இடம்பெறுகின்றன. ஒருபுறம் எரிபொருட்களுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலையில், இந்த விலையதிகரிப்பானது மக்களின் மீது பொருளாதாரச் சுமைகயையும் ஏற்றியுள்ளது. எனினும் இந்த விலை அதிகரிப்புகள், எரிபொருள் விலைச்சூத்திரத்திற்கு அமையவே செய்யப்பட்டதாக, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர (Kanjana Wijesekara) தெரிவித்துள்ளார்.

பெற்றோல், டீசல், மண்ணெண்ணை, சமையல் எரிவாயு மற்றும் நிலக்கரிக்கான தட்டுப்பாடு நாட்டில் தொடர்ந்தும் காணப்படுகின்றது. டொலர் பற்றாக்குறை காரணமாகவே எரிபொருட்களைப் போதியளவு இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசுக்கு சொந்தமான பெற்றோலியம் கூட்டுத்தாபனமும், இந்தியன் ஒயில் கூட்டுத்தாபனமுமே இலங்கையில் எரிபொருட்களை விநியோகிக்கின்றன. இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கு மாதமொன்று 500 மில்லியன் டொலர் தேவைப்படுகின்றது. இலங்கை தற்போது கடன்களை மீளச்செலுத்த முடியாத வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ளதால், எரிபொருள் கப்பல்களுக்கு நேரடியாக டொலர்களைச் செலுத்தியே எரிபொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. ஒவ்வொரு தடவையும் எரிபொருளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான டொலர்களைத் திரட்டுவதற்கு, அரசு கடுமையான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

**இலங்கையில் கடந்த 10 ஆண்டுகளில் வாகன இறக்குமதி பன்மடங்கு அதிகரித்தமையாலேயே, எரிபொருள் தேவையும் பன்மடங்கு அதிகரித்துள்ளது.** வாகன இறக்குமதியால் அந்நியச் செலாவணி நாட்டை விட்டுச் சென்றது மாத்திரமன்றி, வாகனங்களுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்காகவும் பெருந்தொகையான டொலர்களையும் இலங்கை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உட்பட பல எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் உருவாக்கப்படும் 'எரிபொருள் மாபியா' தொடர்பில் மக்கள் விரக்தியடைந்துள்ளனர். மக்களுக்கு நியாயமாக வழங்க வேண்டிய எரிபொருட்களை பதுக்கும் இவர்கள், முகவர்கள் மூலம் அதிக விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபம் ஈட்டி வருகின்றாரகள். இதன் காரணமாக பாதிப்புக்குள்ளாகும் சாதாரண பொதுமக்கள் மற்றும் அரச ஊழியர்கள் தொடர்பில் யாரும் கவனம் செலுத்துவதில்லை. குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கமும் எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என்பதே மக்களின் கருத்தாக உள்ளது.

அண்மையில் கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்த பெண் பாடசாலை பதில் அதிபர் ஒருவர், எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முன்பாக தனது பிள்ளையுடன் போராட்டத்தில் ஈடுபட்ட உருக்கமான காட்சி சமூகவலைத்தளங்களில் அதிகமாக பகிரப்பட்டன. பாடசாலைக்கு செல்வதற்காக இந்த நிலையத்தில் தனது மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்த அந்தப்பெண்ணை, சிலர் தரக்குறைவாக பேசி அவமானப்படுத்தியுள்ளனர். இந்த நிலையிலையே அவர் போராட்டத்தில் ஈடுபட்டார்.

"கடமைக்கு செல்ல வந்த என்னை தரக்குறைவாக பேசுகின்றனர். கல்வி வேண்டாம், தமக்கு பெற்றோலே வேண்டும் என்கின்றனர். ஆசிரியர்கள் என்றால் தரக்குறைவானவர்கள் இல்லை. உங்கள் பிள்ளைகளுக்கே கல்வி புகட்டுகின்றோம். எங்களுக்கு முறையாக எரிபொருள் கிடைக்க வேண்டும். இல்லையேல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது. நாகரீகமின்றி தரக்குறைவாக பேசுமளவிற்கு ஆசிரியர்கள் இல்லை. இதற்கு நியாயமான தீர்வு வேண்டும்" என அந்தப் பெண்மணி அழுது புலம்பும் காட்சி பலரையும் கண்கலங்க வைத்துள்ளது.

இலங்கையின் எரிபொருள் பாவனையில் தனியார் வீதிப் போக்குவரத்திலேயே 63% எரிபொருள் பயன்படுத்தப்பட்டு வருவதாக மொரட்டுவ பல்லைக்கழகத்தின் போக்குவரத்து மற்றும் சரக்கு முகாமைத்துவத் திணைக்களத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அமல் எஸ்.குமாரகே (Prof Amal S.Kumarage) தெரிவித்துள்ளார். தற்பொழுது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் எரிபொருளுக்கான செலவைக் குறைப்பதற்கு வீதிப் போக்குவரத்துக்கான எரிபொருள் பாவனையை ஆகக் குறைந்தது 25% குறைக்க வேண்டுமென அவர் ஆலோசனை கூறியுள்ளார். வீதிப் போக்குவரத்தினைக் குறைக்க வேண்டுமாயின் பஸ் மற்றும் ரயில் போக்குவரத்து சேவைகளை அதிகரிக்க வேண்டும்.

இலங்கையில் 50% இற்குமதிகமான மின்சாரம் நிலக்கரி மற்றும் டீசல் மூலமே பிறப்பிக்கப்டுகின்றது. வீதிப் போக்குவரத்துக்கு அடுத்ததாக, மின்சார உற்பத்திக்கே இலங்கையில் அதிகளவிலான எரிபொருள் பயன்படுத்தப்படுகின்றது. சுற்றுச்சூழலைப் பாதிக்காத சூரியசக்தியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம், மின்சாரத்திற்கு எரிபொருட்களில் தங்கியிருக்கும் நிலையை முற்றாக மாற்றமுடியும். ஆனால் இலங்கை மின்சாரசபை தனது சொந்த நலன்களுக்காக இதில் அதிகம் ஆர்வம் காட்டவில்லை என்பது தெரிய வருகின்றது. இலங்கையின் எரிபொருளுக்கான தேவையையும் விநியோகத்தையும் வினைத்திறன் கொண்டதாக மாற்றியமைப்பதன் வாயிலாகவே எரிபொருள் பிரச்சனையைத் தீர்க்கலாம்.

***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** sunvaanavil@gmail.com

*'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*

# மே 09: இலங்கைக்கு இன்னுமொரு கறுப்பு நாள்

அன்றைய தினம் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 856 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. தீவைப்பாளர்கள், 74 அமைச்சர்கள் மற்றும் அரச பாராளுமன்ற உறுப்பினர்களின் 77 வீடுகளை அழித்தனர். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 9 பேர் உயிரிழந்தனர். பொலிஸ் ஊடகப் பிரிவின் ஜூன் 7ந் திகதி அறிவிப்பின் பிரகாரம், இது தொடர்பாக மாகாண மட்டத்தில் 2,528 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பன்னிரண்டு பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அந்தத் துரதிருஷ்டவசமான நாளில், பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளையும் சொத்துக்களையும் தீவைப்புத் தாக்குதல்கள் எவ்வாறு அழித்தன என்பது பற்றிய தொடர்ச்சியான கட்டுரைகளில், இது முதலாவதாகும். இந்த சம்பவம் மீண்டும் 1980களின் தசாப்த காலத்து முடிவை எமக்கு நினைவூட்டுகின்றது. நாடு முழுவதையும் ஒரு கருநிழல் மூடியிருந்த எமது வரலாற்றில், பயங்கரத்தின் மிக மோசமான காலகட்டமாக அது இருந்தது. அந்த நேரத்தில் மனித வாழ்க்கையின் மதிப்பு மிகவும் தாழ்ந்த மட்டத்திற்கு இறங்கியிருந்தது. எவருடைய வாழ்க்கை எந்தக் கணத்தில் இழக்கப்படுமென யாருக்குமே தெரியாது.

இது போன்ற பல துயரமான கதைகளில் ஒன்றினை இங்கே நாங்கள் விவரிக்கின்றோம்.

**பயங்கரம்**

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமன (Damana) கிராமமும் அப்போது (1988 ஆம் ஆண்டு) பயங்கரம் விளைவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒன்றாகும். பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டவர்களுக்கு, அவர்களை எதிர்ப்பவர்களைக் கொல்வதில் எந்தத் தயக்கமும் கிடையாது.

ஆயுர்வேத வைத்தியர் எஸ். வீரசிங்க (S.Weerasinghe) ஜே.வி.பி. செயற்பாட்டாளர்களின் மிருகத்தனத்தை எதிர்த்ததால், அவர்களின் இலக்குக்கு ஆளானார். ஆயினும்கூட, உண்மையான தேசபக்தரான வைத்தியர் வீரசிங்க தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்கும் கோழையாக இருக்கவில்லை.



பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யு.டி.வீரசிங்க, அவரது மனைவி எஸ்.ஏ.சவித்ரா பிரியதர்ஷினி (S.A.Savithra Priyadarshini), அவரது இரண்டு மகன்களான திசுன் (Thisun) மற்றும் சசேதன (Sachethana)

மூன்று மகன்கள் மற்றும் மூன்று மகள்களின் தந்தையான வீரசிங்க ஒரு பெரிய பழைய வீடொன்றில் வசித்து வந்தார். அருகில் மற்றுமொரு வீடு கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. இந்த துயரச் சம்பவத்திற்கு சில நாட்களுக்கு முன்னர், தனது பிள்ளைகள் ஜே.வி.பி. செயற்பாட்டாளர்களால் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்காக, அவர் தனது மூத்த இரண்டு மகன்களையும் நுவரெலியாவில் உள்ள தனது இளைய சகோதரரின் இல்லத்தில் விட்டுச் சென்றார். அவர், அவரது மனைவி, இளைய மகன் மற்றும் மூன்று மகள்கள் மட்டுமே அந்த வீட்டில் எஞ்சியிருந்தனர்.

**சுரேகா நில்மினி இலங்ககூன்**
**(Sureka Nilmini Illangakoon)**

ஜே.வி.பி. செயற்பாட்டாளர்கள் அந்தி சாய்ந்த பின்னர் ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றுவதற்குக் கூட அனுமதி வழங்காத நிலையில், வீரசிங்க தனது பிள்ளைகள் கல்வி கற்கும் நடவடிக்கைகளுக்கு உதவும் பொருட்டு, ஒரு மெழுகுதிரியை ஏற்றி, திரியின் வெளிச்சம் வெளியிலிருந்து காணப்படுவதைத் மறைப்பதற்காக, பாய் ஒன்றினைத் தடுப்பாகக் கொண்டு வீட்டினை மூடினார்.

அந்த மாதிரியான ஓர் இரவில் வீரசிங்காவின் இல்லத்தின் மீது மரணத்தின் நிழல் விழுந்தது. இரண்டு இளைய மகள்களும் பாதி கட்டி முடிக்கப்பட்ட வீட்டிற்குள் படித்துக் கொண்டிருந்தபோது, எட்டு வயது இளைய மகனும் அவரது பெற்றோரும் பழைய வீட்டில் தங்கியிருந்தனர்.

இரத்த தாகம் கொண்ட கொலைகாரர்கள் திடீரென வீட்டிற்குள் நுழைந்து, வைத்தியர் வீரசிங்கவை வீட்டை விட்டு வெளியே இழுத்துச் சென்று அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்த அவரது குடும்பத்தினர் முன்னிலையில் திரும்பத்திரும்ப துப்பாக்கியால் சுட்டனர்.

“எனது தந்தையை துப்பாக்கிச் சூடுகள் கொல்லவில்லை. எனது அம்மா, எனது சகோதரிகள் மற்றும் நான் பயத்தில் அலறிக் கொண்டிருக்கையில், அவர் இறக்கும் வரை, அவர்கள் பின்னர் என் தந்தையை 14 முறை கத்தியால் குத்தினார்கள்”

**குற்றம்**

இந்தக் கொலையை நேரில் கண்டபோது எட்டு வயதாக இருந்த இளைய மகன் வீரசிங்க தேவகே வீரசிங்க, (Weerasinghe Dewage Weerasinghe) தாங்க முடியாத துயரத்துடன் இக்குற்றத்தினை இன்னமும் நினைவு கூருகிறார்:

“எட்டு வயதில் எனது தந்தை எவ்வாறு கொல்லப்பட்டார் என்பதை என்

கண்களாலேயே பார்த்தேன். இன்று எனது மகனும் தனது எட்டு வயதில் இதே போன்றதொரு துரதிர்ஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது”

**சம்பவம்**

“மே 9 ஆம் தேதி நடந்த சம்பவத்தின் போது எங்கள் சொத்துக்கள் அனைத்தையும் அழித்த தீவைப்புத் தாக்குதல்களை எனது மகன் பார்த்தான். என் தந்தை கொல்லப்பட்ட அந்த நாளில் எனக்கு ஏற்பட்ட அதே திகிலூட்டும் அதிர்ச்சியை, இன்று என் குழந்தைகளும் உணர்கிறார்கள்”

மே 9ந் திகதி மாலை நியாயப்படுத்த முடியாத வன்முறையின் சோகமான நினைவுகளை ஆயர்வேத வைத்தியர் வீரசிங்கவின் இளைய மகனும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான டபிள்யு.டி.வீரசிங்க எவ்வாறு விவரித்தார் என்பதே மேலேயுள்ளது. “அன்று நான் (முன்னாள்) பிரதமரைப் பார்க்கச் சென்றேன். பயங்கரவாதத்திற்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டுவந்து, எங்களது கிராமங்களில் உள்ள மக்களுக்கு ஆறுதல் அளித்த தலைவர் அவர் என்பதால், (முன்னாள்) பிரதமர் மீது எனக்கு ஆழ்ந்த மரியாதையும் அன்பும் உண்டு.

பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் போது, நானும் எனது சகோதர சகோதரிகளும், எங்கள் பாடசாலை நாட்களின் இரவுகளின் பெரும்பகுதியை காடுகளிலோ அல்லது இராணுவ முகாம்களிலோ கழித்தோம். நாங்கள் உறங்கச் சென்றபோது, அடுத்த நாள் நாங்கள் உயிரோடு இருப்போமா என்று எங்களுக்குத் தெரியவில்லை.

மே 9ம் திகதி மாலை கோட்டா காமவின் (Gota Gama) ‘மல்லி’ (‘தம்பி’) ஒருவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமைச்சர் விமலவீர (Wimalaweera) மற்றும் எனது வீடுகளைத் தாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக எங்களை எச்சரித்தார்.

நான் உடனடியாக அந்தப் பகுதி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு (O.I.C) தகவல் தெரிவித்தபோது, அவர் எங்கள் வீட்டைப் பாதுகாப்பேன், கவலைப்பட வேண்டாம் என்று கூறினார். தாக்குதல்காரர்கள் எங்கள் வீட்டை நோக்கிச் செல்வதைக் கண்ட சில கிராமவாசிகள் அதனைத் தடுக்க விரைந்தபோது, பொலிஸ் பொறுப்பதிகாரி அவர்களை விரட்டிக் கலைத்து, அமைதியைக் குலைக்க வேண்டாமெனவும் அவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

பின்னர் அவர் (பொலிஸ் பொறுப்பதிகாரி) எங்கள் வீட்டைப் பாதுகாக்கும் இரண்டு பொலீஸ் அதிகாரிகளுக்கும் அவர்களது துப்பாக்கிகளைப் பயன்படுத்தக்கூடாது என்றும் கட்டளையிட்டிருந்தார். வீட்டு மின்விளக்குகள் மற்றும் தெருக்களில் எரிந்த பிரகாசமான மின்விளக்குகளை அணைக்க பொலிஸ் பொறுப்பதிகாரி உத்தரவிட்டிருந்த நிலையில், குண்டர்கள் முதலில் தண்ணீர் குழாய்களை உடைத்தனர். தாக்குதல்காரர்கள் எமது இடத்தை சூறையாடிய பின்னர், எமது வீட்டிற்கு தீ வைப்பதினைத் தடுப்பதற்கு அவர் 45 நிமிடங்களாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை”

**பொலிஸ்**

பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்க, “இந்தக் குற்றத்தைத் தடுப்பதற்கு பொலிசார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது எனக்கு ஒரு பெரிய கேள்வியாகும். நாங்கள் எல்லாவற்றையும் இழந்தோம். எல்லாம் சாம்பலாகப் பொசுக்கப்பட்டது. என் மனைவி, இரண்டு குழந்தைகள் மற்றும் நாங்கள் அணிந்திருந்த உடைகள் மட்டுமே எஞ்சியிருந்தன.

இந்த வீடு என் தந்தையால் 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இரண்டு அறைகள், ஒரு மண்டபம் மற்றும் சமையலறை ஆகியவற்றைக் கொண்ட ஒரு வீட்டைக் கட்டுவதற்கு நான் அடிக்கல் நாட்டினேன். அப்போது நான் அரசியலுக்கு வரவில்லை. 2010 ஆம் ஆண்டு நான் அந்த வீட்டிற்கு கொங்கிரீட் தட்டொன்றினை வைத்தேன்.

2014 இல் கூரை கட்டப்பட்டது. நான் பாராளுமன்ற உறுப்பினராகியதின் பின்னர், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்ட 10 மில்லியன் ரூபா கடனிலிருந்து, வீட்டிற்கு ஜன்னல்களைப் பொருத்துவதற்கும் கட்டிடத்தின் வண்ணப் பூச்சு வேலைகளுக்காகவும் 5 மில்லியன் ரூபா கடனைப் பெற்றேன்.

ஒன்றரை மாதங்களுக்கு முன்னர்தான் நாங்கள் வீட்டிற்கு வசிக்க வந்தோம். வீட்டின் பின்புற பிரிவு இன்னமும் கட்டப்பட வேண்டியுள்ளது. பொது நிதியிலிருந்து ஒரு ரூபாயைக்கூட கொள்ளையடிக்காமல் இருந்தும், எனக்கு ஏன் இப்படிச் செய்யப்பட்டது என்பது எனக்கு துக்கத்தை அளிக்கின்றது. 2010 ஆம் ஆண்டு தமன பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்ற போது, இந்த சமுதாயத்தினை மாற்றுவேன் என நம்பினேன்.

பிரதேச சபை உறுப்பினருக்குரிய சம்பளத்தை நான் வாங்காது, எனது மோட்டார் சைக்கிளிலேயே வேலைக்குச் சென்றேன். ஆனால் அதற்கான பெட்ரோலுக்கு பிரதேச சபை நிதியிலிருந்து வாங்கவில்லை. அலுவலகத்தில் வேலை செய்வதற்காக வீட்டிலிருந்து கதிரையையும் மேசையையும் கூட எடுத்துச் சென்றேன்

நான் முதன்முதலில் பிரதேச சபை அலுவலகத்திற்கு விஜயம் செய்தபோது, நீர் மற்றும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்தது. ஒரு வருடத்திற்குள் நான் அவற்றை மீட்டெடுத்து, அதனை மேம்படுத்தினேன். முன்னாள் அமைச்சர் ஃபெரியல் அஷ்ரஃப் (Ferial Ashraff), தீகவாபி (Deeghawapi) விகாரைக்குச் சொந்தமான 12,600 ஏக்கர் நிலத்தை வீட்டுவசதித் திட்டத்திற்காக கையகப்படுத்தும் முயற்சிக்கு எதிராக, நான் ஆர்ப்பாட்டமொன்றிற்கும் ஏற்பாடு செய்தேன்.

கடைசி முயற்சியாக நான் உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்தேன். அதற்கு செலவு செய்வதற்காக டி.எஸ்.சேனநாயக்க எனது தந்தைக்கு வழங்கிய மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு ஏக்கர் நெற்பயிர் காணியை 500,000 ரூபாவுக்கு அடமானம் வைக்க வேண்டியிருந்தது.

கோவிட்-19 தொற்றுநோய்களின் போது, சுமார் 20 இளைஞர்களின் உதவியுடன் முகக்கவசங்களைத் தைக்க கொழும்பிலிருந்து பொருட்களை வாங்குவதற்காக எனது நண்பர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்காக எனக்கு வழங்கிய 1.5 மில்லியன் ரூபாவை நான் செலவிட்டேன். அனைத்து மருத்துவமனைகளுக்கும் முகமூடிகள் வழங்கப்பட்டன” என்று வருத்தத்துடன் கூறினார்.

இவை பாராளுமன்ற உறுப்பினர்

வீரசிங்கவின் மக்கள் சேவையின் ஒரு சிறிய பகுதி மட்டுமேயாகும்.

**உதவியற்ற நிலைமை**

"அரசியலுக்கு வரும் எந்தவொரு எண்ணமும் எனக்கு இருந்ததில்லை. எனினும் காணி வழக்கொன்றிற்குப் பிறகு மக்கள் என்னை ஒரு தலைவராக ஏற்றுக்கொண்டனர். என் தந்தையின் கொலைக்குப் பிறகு நாங்கள் உதவியற்றவர்களாக இருந்ததால், இது எளிதான பயணம் அல்ல. எங்கள் ஆறு பேருக்கும் உணவளிக்க என் அம்மா வீடுகளில் வேலைக்காரியாக வேலை செய்தார்.

தமனவிலுள்ள கல் கண்டாவில் (Gal Kanda) அமைந்திருக்கும் கிராமப் பாடசாலையில் எனது கல்விப் பொதுத்தராதர சாதாரண நிலைப் பரீட்சையில் சித்தியடைந்ததின் பின்னர், அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க வித்தியாலயத்தில் எனது க.பொ.த உயர்தர (விஞ்ஞானம்) கல்வி பயில நான் சேர்ந்திருந்தேன். எனினும், வீட்டிலிருந்து பத்து கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அந்த பாடசாலைக்குச் செல்வதற்கு, பஸ் சீசன் பயணச்சீட்டு ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு என்னிடம் பணம் இருக்கவில்லை"

"எனது இளைய சகோதரி பல்கலைக்கழகத்திற்கு தேர்வாகிய போதிலும், நிதி சிக்கல்கள் காரணமாக அவர் அங்கு செல்லவில்லை. அதற்குப் பதிலாக அவள் பொலீஸில் சேர்ந்தாள்"

"எனக்கு க.பொ.த உயர்தரத்தில் முதல் தரத்தில் மூன்று சாதாரண சித்திகள் இருந்தபோதிலும், இரண்டாவது முறையாக தேர்வு எழுதுவதற்கு ரியூஷன் வகுப்புகளுக்குச் செல்ல என்னிடம் பணமிருக்கவில்லை. எனவே, நான் வேலையொன்றினை எடுப்பதற்கு தீர்மானித்தேன். முதலில் நான் ஒரு பாதுகாப்பு ஊழியராக (security guard) கடமையாற்றினேன். அதன் பிறகு நான் பல அரசுப் பணிகளைச் செய்தேன். இறுதியாக நான் அமைச்சர் சரத் வீரசேகரவின் தேர்தல் பிரச்சாரத்தில் இணைந்து கொண்டு மேத்தா சங்கத்துடன் (Metha Society) பொதுப்பணியில் ஈடுபட்டேன்"

மே 9ம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்கவின் வீட்டை தீவைப்பாளர்கள் தாக்கிய போது, அவரது மனைவி எஸ்.ஏ.சவித்ரா பிரியதர்ஷினி (S.A.Savithra Priyadarshini) மற்றும் அவரது இரண்டு சிறிய மகன்களான திசுன் (Thisun), சசேதன (Sachethana) ஆகியோர் மாத்திரமே வீட்டில் இருந்தனர்.

"அன்று மாலை நிகழவிருக்கும் தாக்குதல் பற்றிய செய்தி எனக்கு கிடைத்தபோது, வீட்டிலிருந்து சுமார் 130 கிலோமீட்டர் தொலைவில் உள்ள எங்கள் சகோதரனின் வீட்டிற்கு என் தாயை அனுப்பினேன். ஆனால் இதுபோன்ற அழிவை நான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை. அந்தக் கும்பல் வீட்டை நெருங்குவதைப் பார்த்ததும் என் மனைவி இரண்டு குழந்தைகளுடன் அருகிலுள்ள காட்டிற்குத் தப்பிச் சென்றாள்"

"அந்தத் தீ எங்களிடம் இருந்த மதிப்புமிக்க ஆவணங்கள் உட்பட அனைத்தையும் அழித்தது. என் தந்தையின் ஒரு படம் கூட மிச்சமிருக்கவில்லை. நான் சேகரித்து வைத்திருந்த சுமார் 1400 புத்தகங்கள் சாம்பலாகின"

"எனது மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுமாக நாங்கள் இப்போது மடிவெலவில் (Madiwela) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வீடொன்றில் வசிக்கிறோம். என் அம்மா திரும்பி வர விரும்பவில்லை என்பதால், அவர் இன்னும் தனது கிராமத்தில் உள்ள என் சகோதரனின் வீட்டில் வாழ்கிறார்"

"எனது நண்பர்களும் பிக்குகளும் எனக்காக ஒரு சிறிய வீட்டைக் கட்டுவதாக உறுதியளித்த போதிலும், அழிக்கப்பட்ட வீட்டைக் கட்டுவதற்கு நான் பெற்ற கடனில் மீதியாகவுள்ள 3.8 மில்லியன் ரூபாயினை நான் இப்போது திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது"

"என் இரண்டு குழந்தைகளும் வீடு தீக்கிரையாக்கப்படுவதைப் பார்த்துள்ளனர். எனது மூத்த மகன் தரம் 4 இல் படிக்கிறான், இளைய மகன் தரம் 1 மாணவன். இந்த சம்பவத்திற்குப் பிறகும் அவர்களால் பாடசாலைக்குச் செல்ல முடியவில்லை"

"என் மகன் எங்களிடம் வேண்டுகோள் விடுக்கிறான்": 'என் தந்தையின் வீட்டிற்கு தீ வைத்த மாமாக்களிடம் நான் மீண்டும் பாடசாலைக்குச் செல்வதற்கான புத்தகங்களைக் கொண்டு வரச் சொல்லுங்கள்'

"அப்போதிருந்து என் அம்மா மனச்சோர்வால் பாதிக்கப்பட்டுள்ளதால், அவர் இப்போது அந்த சம்பவத்தைப் பற்றி மட்டுமே பேசுகிறார்"

"இனிமேலும் எங்கள் உயிரைப் பணயம் வைத்து அரசியல் செய்வதில் எந்த அர்த்தமும் இல்லை என்று என் மனைவி கூறுகிறார். அத்துடன் நாங்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று பரிந்துரைக்கிறார். நான் இன்னமும் அத்தகைய முடிவை எடுக்கவில்லை, ஆனால் நான் மிகவும் நம்பிக்கையிழந்துள்ளேன்"

**மூலம்: Sunday Observer, 12.06.2022**
**தமிழில்: வானவில்**

## 49 ஆண்டுகளின் பின்னர் முடிவுக்கு வந்த Whisky War

**க**னடா, டென்மார்க் இடையே எல்லைகளை வரையறுப்பதற்கான ஒப்பந்தம் கடந்த 1973ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. எனினும், இந்த இரு நாடுகளுக்கும் இடையே உள்ள வெறும் 1.3 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட குட்டித் தீவான ஹான்ஸ் தீவு (Hans Island) யாருக்குச் சொந்தம் என்பதில் முடிவெடுக்கப்படவில்லை.

வெறும் பாறையால் அமைந்த அந்தத் தீவில் கனிம வளங்கள் எதுவும் இல்லை. மேலும், அங்கு யாரும் வசிக்கவும் இல்லை. இருந்தாலும் அந்தத் தீவுக்கு இரு நாடுகளும் உரிமை கொண்டாடி வந்தன.

1984 ஆம் ஆண்டில் டென்மார்க் அமைச்சர் ஒருவர் தங்கள் நாட்டுக் கொடியையும் மது போத்தல் ஒன்றையும் வைத்து 'டென்மார்க் தீவிற்கு நல்வரவு' என்று எழுதி வைத்துச் சென்றார். அதற்குப் பதிலடியாக, கனடா நாட்டுக் கொடியையும் கனடா மது போத்தலையும் அந்த நாட்டவர்கள் வைத்தனர். அதன் தொடர்ச்சியாக, இரு நாட்டு கொடிகளும் மது போத்தல்களும் ஹான்ஸ் தீவில் ஏட்டிக்குப் போட்டியாக வைக்கப்பட்டு வந்தன.

இதன் காரணமாக, கனடாவிற்கும் டென்மார்க்கிற்கும் இடையிலான இந்த எல்லைப் பிரச்சினை 'Whisky War' என்று பரவலாக அழைக்கப்பட்டது.

இந்த சூழலில், ஹான்ஸ் தீவை தங்களிடையே பிரித்துக்கொள்வதற்கான ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையே ஜூன் 14ந் திகதி கையொப்பமாகியுள்ளது. இதன் மூலம், 49 ஆண்டுகளாக நீடித்து வந்த எல்லைப் பிரச்சினை முடிவிற்கு வந்துள்ளது.

# சர்வாதிகார ஜனநாயகம்



**இ**ந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் அறிவிக்கப்படுவதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்னால் (1937) சுயராஜ்யம் கிடைத்தால், நாட்டை எப்படி நிர்வகிக்க வேண்டும் என்பதற்கு முன்னோட்டமாக சில மாகாணங்களில் பொதுத் தேர்தலில் இந்திய அரசியல் கட்சிகள் போட்டி போட அனுமதிக்கப்பட்டு ஆட்சிகளும் ஏற்பட்டன. இந்திய மக்கள் பிரதிநிதிகளுடன் பொறுப்புள்ள அரசு உருவாவதற்கான முதற்படியாக இது பார்க்கப்பட்டது.

சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் தலைமையிலான அரசு அமைந்தது. மிகச் சிறந்த தமிழ் அறிவுஜீவி ஒருவர், ஜனநாயகத்தில் தலைமை எப்படி இருக்க வேண்டும் என்று அற்புதமான ஓர் உரையை அந்தத் தருணத்தில் நிகழ்த்தினார், அவர் தெரிவித்த கருத்துகள் இந்தியாவின் இன்றைய அரசியல் கலாச்சாரத்தை முன்னதாகவே எதிர்பார்த்துப் பேசியதைப் போலவே இப்போதும் பொருத்தமாக இருக்கிறது!

**இருவகைத் தலைவர்கள்**

அப்படிப் பேசிய அறிஞர் சென்னை மாநிலக் கல்லூரியின் ஆங்கில இலக்கியத் துறைப் பேராசிரியர் கே.சுவாமிநாதன். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1938இல் மாணவர்களிடையே பேசிய அவர், “இருவேறுவிதமான அரசியல் தலைவர்கள் உலகில் உண்டு” என்றார்.

தங்களை விட்டால் வழிநடத்த வேறு யாரும் தகுதியானவர்கள் கிடையாது – எனவே தான்தான் முக்கியமானவர் என்று கருதுவோர் ஒரு பிரிவு, அப்படி நினைக்காத உண்மையான தலைவர்கள் இன்னொரு பிரிவு. தன்னைவிட்டால் வேறு யாரும் கிடையாது என்று நினைக்காத தலைவர்களுக்கு அடையாளமாக அவர் மகாத்மா காந்தியைக் குறிப்பிட்டார். ‘காந்தி மிகவும் கவலைப்பட்டவராக, தனக்குப் பிறகு இப்பணிகளை மேற்கொள்ள தகுதியானவர்கள் வர வேண்டும் என்கிற அக்கறையில் கடந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாகப் பலரை அடையாளம் கண்டு அவர்களுக்குப் பயிற்சி அளித்து பொறுப்புகளை ஒப்படைத்து வருகிறார். அவருடைய கடைசி விருப்பம் எதுவென்றால், தனக்குப் பிறகு தலைமை தாங்கவும், வழிநடத்தவும் யாருமில்லை என்ற நிலைமை வரக் கூடாது என்பதுதான். காந்தி அடையாளம் கண்டு பொறுப்புகளை அளித்து பயிற்சி தந்திருக்காவிட்டால் ஜவாஹர்லால் நேருவோ, ராஜேந்திர பிரசாதோ கிடைத்திருக்க மாட்டார்கள். அவரால் அடையாளம் காணப்பட்டு கைதூக்கிவிடப்பட்டாலும் அவர்கள், அவர் சொல்வதெல்லாம் சரி என்று ‘ஆமாம் சாமி’ போடுகிறவர்களாக இல்லை. வெறும் களிமண்ணைக் குழைத்தெடுத்து பெரிய செயல்வீரர்களைப் படைக்க காந்தியால் முடிந்தது, அப்படிப்பட்டவரால் உள்நாட்டிலேயே கிடைத்த தங்கத்தைக் கொண்டு எதைத்தான் செய்ய முடியாது? தன்னைப் போன்ற உருவம் இல்லாமல், தன்னுடைய குண நலன்களைக் கொண்ட சத்யாக்கிரகிகளை அவரால் உருவாக்க முடிந்தது.’

இப்படி ஆரோக்கியமான முன்னுதாரணத்தைச் சுட்டிக்காட்டிய சுவாமிநாதன் அடுத்து ஓர் எச்சரிக்கையையும் அந்த உரையிலேயே விடுத்தார். ‘இன்னொரு வகைத் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களைப் பின்பற்றுபவர்களையே நம்ப மாட்டார்கள், யாரையும் சுதந்திரமாகச் செயல்பட அனுமதிக்க மாட்டார்கள், சுயமாக முடிவுகளை எடுக்கக்கூடியவர்களைத் தங்கள் அருகில் வைத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் அனைவரும் புளியமரங்களைப் போன்றவர்கள். அது வாழும் காலத்தில் உன்னதமாக இருக்கும், நல்ல பலன்களையும் அளிக்கும், தன்னைச் சுற்றிலும் வேறு எந்த மரமும் தாவரமும் வளர அனுமதிக்கவே அனுமதிக்காது.

அதைப் போன்றவர்கள் அந்தத் தலைவர்கள். தங்களுடைய கருத்துகளுக்கு எதிர்க் கருத்துகளைக் கூறுகிறவர்களை அவர்களுக்குப் பிடிக்காது, நட்புரீதியிலான விமர்சனங்களைக்கூட அவர்கள் வெறுப்பார்கள். துருக்கிய நாட்டு மன்னர்களைப் போலவே நடந்துகொள்வார்கள். சிம்மாசனத்துக்குப் பக்கத்தில் தன்னுடைய உடன் பிறந்தவர்கள்கூட வருவதை அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் விடைபெறும் காலத்தில் தலைமைக்கு ஏற்ற வாரிசு இல்லாமல் தலைமையிடத்தை அப்படியே மலடாக்கிவிட்டுச் செல்வார்கள்.’

***ராமசந்திர குஹா***

‘நம்முடைய நாட்டுக்கு இப்போது என்ன தேவை என்றால் – நம்முடைய (கல்லூரி – பல்கலைக்கழக) விடுதிகள் எந்த விதத்தில் உதவலாம் என்றால் சராசரியான திறமைகளுக்கும் சற்றே அதிகம் உள்ள அரசியல் தலைவர்களை உருவாக்குவதுதான். தனக்கு அடுத்திருப்பவர்களைவிட பல மடங்கு அறிவும் ஆற்றலும் தொலைநோக்கும் உள்ள மாபெரும் தலைவருக்கும் அவருடைய தொண்டர்களுக்கும் இடையே திறமையில் மிகப் பெரிய இடைவெளி ஏற்படுவதை நான் விரும்பவில்லை.’

சுவாமிநாதனின் உரைகள் அடங்கிய ஆய்வேடுகளைச் சமீபத்தில்தான் படித்தேன். 1938இல் தனது உரையில் அவர் விடுத்த எச்சரிக்கை 2022இல்

இந்தியாவுக்கு அப்படியே பொருந்துவதை அதிர்ச்சியோடு அங்கீகரித்தேன். தன்னை உயர்வாக சித்தரிக்கும் ஒரு பிம்பத்தைக் கட்டமைக்க எந்தப் பிரதமரும் இந்த அளவுக்கு அரசு இயந்திரத்தையும் கட்சி அமைப்புகளையும் பயன்படுத்தியதில்லை. உலக வரலாற்றிலேயே இதுவரை அறிந்திராத துதிபாட்டு வழிமுறை இங்கே இருக்கின்றது.

**மோடியும் மம்தாவும்**

நரேந்திர மோடி தன்னைத் தன்னிகரில்லாத் தலைவராக மக்களுடைய மனங்களில் பதியவைக்க எடுக்கும் நடவடிக்கைகளையும், அதனால் நேரக்கூடிய ஆபத்தான விளைவுகளையும் என்னுடைய முந்தைய கட்டுரைகளில் எழுதியிருக்கிறேன். அவற்றை மீண்டும் எழுத விரும்பவில்லை. இப்படி அதிகாரத்தை ஒருநபர் கையில் மட்டுமே குவிக்கும் தனிநபர் வழிபாட்டு அரசியல் கலாச்சாரம் ஒன்றிய அரசில் மட்டுமல்ல, பல்வேறு மாநில அரசுகளிலும் பரவியிருக்கிறது.

சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலாக இருந்தாலும், நாடாளுமன்ற (மக்களவை) பொதுத் தேர்தலாக இருந்தாலும், நரேந்திர மோடியைக் கடுமையாக எதிர்க்கும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ஒற்றை ஆளாக அவருக்கு ஈடுகொடுத்து நிற்கிறார். அவருடைய அரசியலும் மோடியின் அரசியல் பாணியைப் போலவே இருக்கிறது. அவர் தலைமையேற்று நடத்தும் திரிணமூல் காங்கிரஸ், மேற்கு வங்க அரசு, வங்காளிகளின் கடந்த காலம் – நிகழ்காலம் – எதிர்காலம் என்று அனைத்துமே அவருக்குள்தான் அடக்கம் என்பதைப் போலச் செயல்படுகிறார்.

இப்படி அரசியல் கட்சி, மாநில அரசு, மக்கள் ஆகிய அனைத்தையும் கலந்து அவற்றுக்குத் தான் மட்டுமே அடையாளம் என்பதைப் போல மம்தா பானர்ஜி செயல்படுவது - தலைவர், கட்சி, அரசு, மக்கள் ஆகிய அனைத்துமே நானே என்று தேசிய அளவில் பிரதமர் மோடி செயல்படுவதன் கண்ணாடி பிம்பம் போலவே இருக்கிறது. ஒப்புமைகள் இத்தோடு முடிந்துவிடவில்லை. திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய முதல்வரைப் பற்றிப் பேசும்போது அச்சம் கலந்த மரியாதையுடனும், விதந்தோதும் விதமாகவும்தான் பேசுகிறார்கள்.

தனக்கு விசுவாசமான, தான் சொன்னபடி கேட்டு நடக்கும் அதிகாரிகளை மட்டுமே பிரதமர் மோடி பக்கத்தில் வைத்துக்கொள்வதைப்போலவே மம்தாவும் செயல்படுகிறார். பத்திரிகைச் சுதந்திரம் குறித்தும், அரசு அமைப்புகள் சுயாதீனமாகச் செயல்பட வேண்டும் என்பது குறித்தும், உதட்டளவில் மம்தாவும் பேசுகிறார், செயற்பாட்டிலோ சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறார், நிறுவனங்கள் சுயமாகச் செயல்பட அனுமதிப்பதில்லை, அப்படி அனுமதிப்பது தன்னுடைய ஆட்சிக்கே ஆபத்தாகிவிடும் என்று அவர் கருதுகிறார்.

மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி என்னவெல்லாம் செய்கிறாரோ, அதையே அர்விந்த் கேஜ்ரிவால் டெல்லியில் (மாநிலத்தில்) செய்கிறார். பினராயி விஜயன் கேரளத்தில் அமுல்படுத்துகிறார், ஆதித்யநாத் உத்தர பிரதேசத்தில் அரங்கேற்றுகிறார். ஜெகன் மோகன் ரெட்டி ஆந்திரத்தில் அவ்வண்ணமே செயல்படுகிறார். தெலங்கானாவில் கே.சந்திரசேகர ராவும் ராஜஸ்தானில் அசோக் கெலாட்டும் அவ்வாறே செயல்படுகின்றனர்.

இந்த ஏழு முதல்வர்களும் இந்தியாவின் வெவ்வேறு அரசியல் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், தனித்தனியாக ஏழு மாநிலங்களில் ஆட்சி செய்கிறவர்கள். ஆனால், ஏழு பேருமே அடிப்படையில் சர்வாதிகாரிகளாகவும், ஆட்சி செய்யும் முறையில் அதே பாணியைக் கடைப்பிடிக்கிறவர்களாகவும் இருக்கின்றனர். (என்னுடைய பட்டியல் முழுதானதல்ல, கோடிட்டுக் காட்டுவது மட்டுமே. இன்னும் பல முதல்வர்கள் தங்களுடைய மாநிலத்துக்கு ஏகப்பிரதிநிதி தானே என்கிற தோரணையில் செயல்படுவதோடு மற்றவர்களைவிட நான் உயர்ந்தவன் எனும் கண்ணோட்டத்திலேயே நடந்துகொள்கின்றனர்)

பேராசிரியர் சுவாமிநாதன் இப்போது உயிரோடு இருந்திருந்து இந்த முதல்வர்களையெல்லாம் உற்று கவனித்து வந்திருந்தால், 'இந்த முதல்வர்கள் மாற்றுக்கருத்துகளைக் கூறக்கூட அனுமதிக்க மனமில்லாத சகிப்புத்தன்மையற்றவர்களாகவும், நட்புரீதியிலான விமர்சனங்களைக்கூட தாங்கும் மனப்பக்குவமற்றவர்களாக இருக்கின்றனர்' என்று கூறியிருப்பார்.

**சர்வாதிகாரம்**

சுதந்திரமாகச் சிந்தித்து தாங்களாகச் செயல்படும் தொண்டர்களைவிட, தான் சொல்கிறபடி நடப்பவர்கள் மட்டுமே தங்கள் பக்கத்தில் இருக்க வேண்டும் என்று இத்தகைய தலைவர்கள் விரும்புவர். மற்றவர்களுடைய வாழ்க்கையையும் வளர்ச்சியையும் இத்தலைவர்கள் நசுக்கிவிடுவார்கள்.

தங்களை விட்டால் வழிநடத்த யாருமில்லை எனும் நிலையையே அவர்கள் விரும்புவார்கள், தங்களுக்குப் பிறகு அடுத்த தலைமுறைத் தலைவர்களை வளர்ப்பதில் ஆர்வமோ, ஈடுபாடோ இல்லாமல் இருப்பார்கள். தங்களைச் சுற்றி இருப்பவர்களைவிட எல்லாவிதத்திலும் தங்களை உயரமான பீடத்தில் ஏற்றிக்கொள்வார்கள். யாருக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவர்களோ அவர்களுக்கும் தங்களுக்கும் இடையில் மிகப்பெரிய அந்தஸ்து இடைவெளி இருக்குமாறு செயல்படுவார்கள்.

எல்லோரையும் ஒரே தட்டில் வைத்துப் பார்க்கிறீர்கள் என மற்றவர்கள் என்னை குற்றஞ்சாட்டக்கூடும், இந்தச் சர்வாதிகாரிகளுக்குள்ளும் சின்னச் சின்ன வேறுபாடுகள் இருக்கின்றன என்பதை நாம் அங்கீகரித்தாக வேண்டும். மோடி தேசிய அளவில் என்றால், யோகி ஆதித்யநாத் இந்தியாவின் மிகப் பெரிய மாநிலத்தில் சர்வாதிகாரத்தையும் பெரும்பான்மையினவாதத்தையும் இணைத்துச் செயல்படுகிறார். மதச் சிறுபான்மையினரைச் சிறுமைப்படுத்தி, தண்டிக்கிறார் அரசு அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதிலும் அரசியல் எதிரிகளைச் சிறையில் தள்ளுவதிலும் மோடியும் ஆதித்யநாத்தும் இரக்கமே இல்லாமல் செயல்படுகிறவர்கள்.

அதேசமயம், மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, டெல்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால் ஆகியோரும் தனியதிகாரத்தையும் சொந்த செல்வாக்கையும் அரசு அதிகாரம் – அரசு நிதி ஆகியவற்றைப் பயன்படுத்தி தங்களைச் செல்வாக்குள்ளவர்களாக வளர்த்துக்கொள்கிறார்கள் என்று யாராவது சொன்னால் அதை ஆட்சேபிக்கவே முடியாது.

சர்வாதிகாரம் கோலோச்சுகிற ஆட்சிகளில், அதாவது இராணுவ ஆட்சிகளில், பாசிஸ்டுகளின் ஆட்சியில், கம்யூனிஸ்ட் கட்சியின் ஒற்றையாட்சியில், பதவியில் இருக்கும் தலைவரைப் போற்றித் துதிக்கும் கலாச்சாரம் கட்டாயமாகப் பின்பற்றப்படும். நாட்டின் உச்சபட்ச அரசியல் அதிகாரமுள்ள பதவியை வகிப்போர், அனைத்து மக்களின் கருத்துகளையும் நேரடியாக

அவரே பிரதிநிதித்துவப்படுத்துவதாக அறிவிக்கப்படும், இது ஜனநாயக சிந்தனைகளுக்கு அப்படியே நேர் முரணானது.

நாடு சுதந்திரம் பெற்று 75வது ஆண்டில் நுழைந்துள்ள நாம் சர்வாதிகாரியின் பண்புக்கூறுகளை அவ்வப்போது வெளிப்படுத்தும் தனிநபர் தலைவர்களை அதிகம் கொண்ட ஜனநாயக நாடாகத் திகழ்கிறோம். இது நம்முடைய மனங்களுக்கு நல்லதல்ல. ஆட்சியாளர்கள் குறித்து வெளிப்படையாகக் கருத்துத் தெரிவிக்க முடியாமல் மனச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு கட்டுண்டு கிடக்கிறோம். சுதந்திரமாகவும் நாம் விரும்புவதை அப்படியேயும் சொல்ல முடியாமல் தவிக்கிறோம். சுய வளர்ச்சியிலும் அதிகாரத்திலும் மட்டும் அக்கறை உள்ள தலைவர்கள் நாட்டின் நிர்வாகத்திலும் வளர்ச்சியிலும் தங்களுக்குரிய அன்றாடக் கடமைகளை நிறைவேற்றாமல் புறக்கணிப்பார்கள்.

எல்லா அதிகாரங்களையும் தங்களுடைய கைகளிலேயே குவித்துக் கொண்டு, அமைச்சர்கள் அல்லது அரசு அதிகாரிகளை நம்பாமல் – அவரவர் துறைகளில் செயல்படுவதற்குக்கூட சுதந்திரம் தராமல் இருப்பவர்கள் மக்கள் தொகை அதிகமுள்ள மேற்கு வங்கம் போன்ற மாநிலத்தை ஆளத் தகுதியற்றவர்கள் – அதைவிடப் பல மடங்கு பெரிதான இந்தியாவைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

இடைவிடாமல் தங்களைச் சுற்றி துதி பாடிக்கொண்டே இருக்கும் விசுவாசிகளைக் கொண்டவர்கள், மோசமான பிரதமராக (அல்லது முதல்வராக) வரலாற்றில் இடம்பெறுவார்கள். மக்களுடைய கருத்தென்ன, தன்னுடைய கட்சியில் உள்ள தலைவர்களின் கருத்துகள் என்ன, மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்களின் விமர்சனங்கள் எப்படிப்பட்டவை, சுதந்திரமான ஊடகம் என்ன சொல்கிறது என கவனித்து, கருத்தில் எடுத்துக்கொண்டு செயல்படுகிற தலைவர்கள் ஜனநாயகர்களாகவும் நல்ல தலைவர்களாகவும் வரலாற்றில் இடம்பெறுவார்கள்.

இந்திய நாட்டின் மொத்த நிர்வாகத்தையும் டெல்லியிலிருந்துகொண்டு ஒரே பெரிய மகா தலைவர் நிர்வகிப்பதன் மூலம், இந்திய பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்திவிட முடியாது, இந்தியாவின் சமூக ஒற்றுமையைக் காப்பாற்றிவிட முடியாது, தேசிய பாதுகாப்பை உறுதிசெய்துவிட முடியாது. சர்வாதிகாரப் போக்குள்ள பிரதமருக்கு, சர்வாதிகாரப் போக்குள்ள பல முதல்வர்கள் வாய்த்திருப்பது நாட்டின் முன்னேற்றத்துக்கு மிகப் பெரிய ஆபத்துகளாகவே இருக்க முடியும்.

இந்திய நாட்டைச் சேர்ந்த நிபுணர்களும், எங்கெங்கோ பரந்துகிடக்கும் அவர்களது நாட்டு மக்களும் சொல்வதைக் கேட்டும் கவனித்தும் செயல்படும் தலைவர்களால் நாடு பல வகையிலும் நன்மைகளையே பெறும். அப்படிப்பட்ட தலைவர்கள் தங்களுடைய அமைச்சரவை சகாக்களுக்கு அதிகாரங்களையும் செயல்படும் சுதந்திரத்தையும் வழங்கி அவர்கள் நன்றாகச் செயல்படும்போது அதற்குரிய பாராட்டையும் அவர்களுக்கு வழங்குவார்கள்.

பொது நிறுவனங்களின் தனித்தன்மையை அங்கீகரித்து, சுயாதிகாரத்தை அவை நன்கு பயன்படுத்த அனுமதிப்பார்கள். பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயல்பட அனுமதித்து அவற்றுக்கு உரிய மரியாதை அளிப்பார்கள், மாற்றுக்கட்சித் தலைவர்களுக்கு அவமதிப்பை ஏற்படுத்தும் வகையில் முத்திரை குத்தாமல், அவர்களுடன் ஆக்கப்பூர்வமாகப் பேசி பிரச்சினைகளுக்குப் பொதுக் கருத்து மூலம் தீர்வு காண்பார்கள்.

**மூலம்: telegraphindia.com**
**தமிழில்: அருஞ்சொல்**

(பினராயி விஜயன் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்பாக இக்கட்டுரையாளர் எழுதியுள்ள கருத்துக்களுடன் 'வானவில்'லிற்கு உடன்பாடு கிடையாது)


# கியூபாவுக்கு எதிரான போக்கைக் கைவிடுங்கள்: மெக்சிகோ ஜனாதிபதி வலியுறுத்தல்

கியூபாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைகள் விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று மெக்சிகோவின் ஜனாதிபதியும், இடதுசாரித் தலைவருமான ஆண்ட்ரியஸ் மனுவல் லோபெஸ் ஓப்ராடொர் (Andrés Manuel López Obrador - AMLO) வலியுறுத்தியுள்ளார். 1958 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் தேதியன்று ஆயுதங்களை விற்பனை செய்யக்கூடாது என்று தொடங்கிய தடைகள், எந்த அமெரிக்க நிறுவனமும் எந்தப் பொருளையும் கியூபாவுக்கு விற்கக்கூடாது என்று மாறியது. உலகம் முழுவதும் கண்டனங்களை எழுப்பியுள்ள இந்தத் தடைகள் கியூபப் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் கொரோனா பெருந்தொற்றின்போது கூடுதல் தடைகளை அமெரிக்கா விதித்திருக்கிறது. நவீன வரலாற்றில் கியூபா மீது சுமத்தப்பட்ட தடைகள்தான் உலகிலேயே மிக நீண்ட நாள் நீடித்திருக்கும் தடைகளாக உள்ளது. இந்தத் தடைகளை முழுமையாகக் கைவிட வேண்டும் என்று மெக்சிகோ ஜனாதிபதி அம்லோ வலியுறுத்தி வருகிறார்.

அமெரிக்க நாடுகளின் உச்சிமாநாடு (Summit of the Americas) இடம்பெறவிருந்த வேளையில் அந்த நாடுகளில் ஒன்றான கியூபா மீது தடைகளை விதித்திருப்பது பொருத்தமானதல்ல என்று அவரும் பல தென் அமெரிக்க நாடுகளும் கூறியிருந்தார்கள். தடைகள் பற்றி செய்தியாளர்களிடம் பேசிய அம்லோ (AMLO), "கியூபா மீது அமெரிக்கா சுமத்தியுள்ள தடைகளை ஜோ பைடன் விலக்கிக் கொள்ள வேண்டும். இந்தத் தடைகள் பழங்கால மனநிலையைக் காட்டுகிறது. மனித உரிமைகளை மீறும் வகையிலானது" என்று குறிப்பிட்டார். அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடைகள் ஏராளமான கியூப மக்களைப் பாதிக்கின்றன என்று சுட்டிக்காட்டிய அவர், "அந்த மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பது மறுக்கப்படுகிறது. இது மனித உரிமை மீறலாகும். இத்தகைய தடைகள் போடப்பட்டிருப்பது தவறான செயலாகும். எந்த நாடாக இருந்தாலும் கியூபாவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதற்கான உரிமை கிடையாது" என்று குறிப்பிட்டார்.

உச்சிமாநாடு பற்றிக் கருத்து தெரிவித்த அவர், "இந்த மாநாட்டுக்கான ஏற்பாடானது சரியான பாதையில் செல்வதற்காக மேற்கொள்ளப்படும் முதல் கட்ட நடவடிக்கையாகும். ஆனால், இத்தகைய முயற்சிகள் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். சில நாடுகளுக்கு அழைப்பு விடாமல் இருப்பது சரியல்ல" என்றார். நிகரகுவா, வெனிசூவெலா மற்றும் கியூபா ஆகிய நாடுகளை அழைக்காமல் ஜூன் 6–10 வரைஅமெரிக்க நாடுகளின் உச்சி மாநாட்டை நடாத்தியது. அதனால் மெக்சிகோ அந்த மாநாட்டை பகிஸ்கரித்தது,

# 61 ஆண்டுகளுக்குப் பிறகு ஒப்படைக்கப்பட்ட லுமும்பாவின் பல்



பற்றிஸ் லுமும்பா

**பெல்ஜியத்தால் மிகக் கொடூரமாக கொல்லப்பட்ட கொங்கோவின் விடுதலை நாயகன் பற்றிஸ் லுமும்பாவின் (Patrice Lumumba) 'பல்' 61 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.**

பற்றிஸ் லுமும்பா... ஆப்பிரிக்கவின் விடுதலை வரலாற்று நாயகர்களில் மறக்க முடியாத பெயர்.

1925 ஆம் ஆண்டு ஜூலை 2 ஆம் நாள், பெல்ஜிய கொங்கோவின் ஒனாலுவா (Onalua) என்ற கிராமத்தில் பழங்குடி குடும்பத்தில் பிறந்தவர்தான் பற்றிஸ் லுமும்பா. சுமார் 80 ஆண்டுகளுக்கு மேலாக பெல்ஜியத்திடம் கொங்கோ அடிமைப்பட்டு இருந்த காலக்கட்டம் அது. பற்றிஸ் தனது இளம் வயதிலேயே கடின உழைப்பாளியாக இருந்தார். படித்துக்கொண்டே கொங்கோவிலிருந்த பெல்ஜிய கொம்பனிகளில் வேலையும் செய்து வந்தார். சிறுவயதிலே பற்றிஸ்"க்கு அரசியலில் ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வமே அவரை அரசியல் நோக்கி அழைத்தும் சென்றது.

கொங்கோ ஐரோப்பாவின் காலனியாக இருந்ததை பற்றிஸ் ஒருபோதும் விரும்பியதே இல்லை. கொங்கோ விடுபட்டு சுதந்திரமாக, அதேநேரத்தில் ஐரோப்பாவுடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். அதனைத்தான் தனது கட்டுரைகளிலும், கவிதைகளிலும் அவர் தொடர்ந்து எழுதி வந்தார்.

பற்றிஸ் தனது 20 ஆவது வயதுக்குப் பிறகுதான் கொங்கோவின் விடுதலைக்கான அரசியல் பிரச்சாரங்களில் ஈடுபட தொடங்கி, அதில் தீவிரமாக ஈடுபட்டார். கொங்கோவில் பழங்குடிகள் இனவாதத்தால் பிரிவினைக்கு உள்ளாகி இருப்பதை பாட்ரீஸ் உணர்ந்தார். இந்த இனவாதம்தான் கொங்கோவின் சுதந்திரத்திற்கு எதிரியாக இருப்பதை கண்டறிந்து, காங்கோ மக்கள் அனைவரும் பொது தேசிய நலனுக்காக ஒன்றுபட வேண்டிய காலக்கட்டம் இது.. ஒன்றுபடுங்கள் என்று மக்களை நோக்கி கேள்வி எழுப்ப தொடங்கினார்.

பற்றிஸின் அரசியல் வளர்ச்சி அங்கிருந்துத்தான் தொடங்கியது. அதன்பின்னர் கொங்கோவின் அரசியல் முகமானார் பற்றிஸ். ஐரோப்பிய நாடுகளும் அவரை அவ்வாறே அறிமுகம் செய்தது. பல போராட்டகளுக்கு இடையே 1958 ஆம் ஆண்டு கொங்கோ தேசிய இயக்கம் (Congolese national movement) என்ற கட்சியை பற்றிஸ் ஆரம்பித்தார்.

## இந்து குணசேகர்

அதனைத் தொடர்ந்து எழுந்த வலுவான தேசியவாத முழக்கம் காரணமாக பெல்ஜியத்தின் கை பணிந்தது. விளைவு... 1960 ஆம் ஆண்டு கொங்கோ குடியரசாக அறிவிக்கப்பட்டது. ஜனநாயக முறையில் நாட்டின் பிரதமராக பற்றிஸ் லுமும்பா பதவியேற்றார். இருப்பினும், ஐக்கிய நாடுகள் சபையுடனான உடன்பாட்டில் ஐரோப்ப நாடுகளின் கண்காணிப்பில் கொங்கோ இருப்பதை பற்றிஸ் எதிர்த்தார்.

மேலும் பெல்ஜியம் - கொங்கோ உடன் ஏற்படுத்தப்பட்ட நட்பு உடன்படிக்கையையும் அவர் இரத்து செய்தார். பற்றிஸின் இந்த நடவடிக்கை பெல்ஜியத்தை கோபமடையச் செய்தது. இதனைத் தொடர்ந்துதான் வரலாற்றில் மன்னிக்க முடியாத குற்றத்திற்கு பெல்ஜியம் தன்னை உடன்படுத்திக் கொண்டது. பாராளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை இருந்தும் அரசின் சொத்துகளை பற்றிஸ் சட்டத்துக்கு புறமாக பயன்படுத்திக்கொண்டார் என்று போலியான குற்றம் சுமத்தப்பட்டு அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. இந்த ஆட்சி கவிழ்ப்பின் பின்னணியில் பெல்ஜியம் இருந்தது. பற்றிஸ் கைது செய்யப்பட்டார்.

1961 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் தேதி கொங்கோ பாதுகாப்புப் படையால் பற்றிஸ் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலையாளர்கள் அத்துடன் நிற்கவில்லை. பற்றிஸ் மரணத்திற்கு தடயம் இருக்கக் கூடாது என்று கருதி அவரது உடலை கூறாக்கி அமிலத்தில் கரைத்தனர். அவர் உடலில் மீதமிருந்த தங்கப் பல், பெல்ஜியம் வசம் இத்தனை ஆண்டுகளாக இருந்து வந்தது.

வரலாற்றில் பற்றிஸ் லுமும்பாவின் மரணம், கொடூரமான மரணமாகவே அறியப்படுகிறது.

61 ஆண்டுகளுக்கு பின்னர் ஒப்படைக்கப்பட்ட பல்: பற்றிஸின் உடல் உறுப்பில் தங்கத்தினாலான அவரது ஒரே ஒரு பல் மட்டுமே மிச்சம் இருந்தது. அதனை திங்கட்கிழமை பெல்ஜிய அரசு, அரசு மரியாதையுடன் பாட்ரிஸின் குடும்பத்தாரிடம் ஒப்படைந்தது.

நிகழ்வில் பெல்ஜிய பிரதமர் அலெக்ஸாண்டர் டி க்ரூ (Alexander De Croo) பேசும்போது, "பற்றிஸ் கொலைக்கு தார்மிகமாக பொறுப்பேற்கிறேன். இது மிகவும் வலி மிகுந்தது. மறுக்க முடியாத உண்மை. இவை நிச்சயம் பேசப்பட வேண்டும். ஒருவர் தனது அரசியல் நம்பிக்கைகளுக்காகவும், வார்த்தைகளுக்காகவும், சிந்தனைகளுக்காகவும் கொல்லப்பட்டார்" என்று வருத்தத்துடன் தெரிவித்தார்.

பற்றிஸ் குடும்பத்தினர் கூறும்போது, "அவரது இறுதிச் சடங்குகளை இனியாவது நாங்கள் முடிப்போம்" என்று தெரிவித்தனர்.

ஆப்பிரிக்க விடுதலை வரலாற்றில் பற்றிஸ் லுமும்பா பெயர் அழுத்தமாக நிலைத்துவிட்டது. அதற்கான காட்சிகளை காங்கோவின் முக்கிய வீதிகளில் நாம் காணலாம். சுரண்டலுக்கு எதிராக பாட்ரிஸின் குரல் கொங்கோவின் இளம் தலைமுறை மூலமாக தொடர்ந்து ஒலித்து கொண்டிருக்கிறது.

"வரலாறு பேசும் அந்த நாள் வரும். ஆப்பிரிக்கா தன் வரலாற்றை எழுதும். அது பெருமையும் கண்ணியமும் கொண்ட வரலாறாக இருக்கும்" ~ பற்றிஸ் லுமும்பா

பற்றிஸ் லுமும்பா கூறியதுபோலவே அந்த நாள் வந்தது....

# உயர்ந்து வரும் பணவீக்கம்!




மிகப் பெரிய பொருளாதார மந்தநிலையை நோக்கி உலகம் நகர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டிருக்கும் கோவிட் 19 கொள்ளை நோய்த்தொற்றும், அதை எதிர்கொள்ள கையாண்ட நடவடிக்கைகளும் ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரத்தை புரட்டிப்போட்டிருக்கின்றன. போதாக்குறைக்கு உக்ரைன் – ரஷ்யா போர், நிலைமையை மேலும் மோசமாக்கி இருக்கிறது.

இதுபோன்ற பொருளாதார மந்தநிலையை உலகம் சந்திப்பது புதிதொன்றுமல்ல. முதலாவது உலகப் போருக்குப் பிறகு 1918இல் தொடங்கிய மந்தநிலை, 1920, 1921 ஆண்டுகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. 1918 ஸ்பானிஷ் காய்ச்சல் என்கிற கொள்ளை நோய்த்தொற்றும் சேர்ந்துகொண்டபோது ஒட்டுமொத்த உலக பொருளாதாரமும் தடம்புரண்டதில் வியப்பில்லை.

கடந்த 70 ஆண்டுகளில் உலகம் இதற்கு முன்பு நான்கு பொருளாதார மந்தநிலைகளை எதிர்கொண்டிருக்கிறது. 1975, 1982, 1991, 2009 ஆம் ஆண்டுகளில் இதேபோல விலைவாசியும், வேலைவாய்ப்பின்மையும் அதிகரித்து, உற்பத்திக்கு ஏற்ப விற்பனை இல்லாத மந்தநிலை காணப்பட்டது. இப்போது 2022இல் கச்சா எண்ணெய் விலையில் தொடங்கி, எல்லா அத்தியாவசியத் தேவைகளும் அதிகரித்திருக்கின்றன. மேலும் அதிகரிக்கக்கூடிய நிலைமை பரவலாகக் காணப்படுகிறது.

அமெரிக்கா உட்பட வல்லரசு நாடுகள் அனைத்துமே கடுமையான பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. உயர்ந்து வரும் பணவீக்கம் என்கிற அசுரனின் தாக்குதல்தான் முக்கியக் காரணம். அமெரிக்க அரசின் புள்ளிவிவரப்படி, கடந்த ஒரு தலைமுறையில் எதிர்கொள்ளாத அளவில் பணவீக்கம் 8.6% அதிகரித்திருக்கின்றது. குடியிருப்புகள், உணவுப் பொருள்கள், விமானக் கட்டணம், புதிய – பழைய வாகனங்கள் என்று அனைத்துப் பிரிவிலும் அதிகரித்த விலைவாசியை அமெரிக்கக் குடிமகன் எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறது.

பணவீக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு, உலகளாவிய மத்திய வங்கிகள் வட்டி விகிதங்களை கடந்த மே மாதம் முதல் உயர்த்தத் தொடங்கியுள்ளன. இந்த நடவடிக்கை மிகவும் தாமதமானது என்று வல்லுநர்கள் கருதினாலும், இப்போது இந்த நடவடிக்கையை எடுக்காவிட்டால், நிலைமை மிகவும் விபரீதத்துக்கு இட்டுச் செல்லும் என்கிற கட்டாயத்தால்தான் அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

உலகளாவிய அளவில் காணப்படும் பொருளாதார மந்தநிலையும், விலைவாசி ஏற்றமும், பணவீக்கமும் இந்தியாவையும் பாதிக்காமல் இல்லை. ஏனைய வல்லரசு நாடுகளையும் வளர்ச்சி அடையும் நாடுகளையும் ஒப்பிடும்போது மிகச் சாதுரியமாக நிலைமை கையாளப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக, ரஷ்யாவுடனான கச்சா எண்ணெய் ஒப்பந்தமும், ரூபாய் – ரூபிள் வர்த்தகச் செலாவணியும் இந்தியப் பொருளாதாரம் சீர்குலைந்து விடாமல் காப்பாற்ற உதவியிருக்கின்றன.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக இந்திய ரிசர்வ் வங்கி, கடந்த சில தினங்களுக்கு முன்பு, வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களுக்கான வட்டி விகித்தை அடுத்தடுத்த வாரங்களில் 0.50% மற்றும் 0.40% என மொத்தம் 0.90% உயர்த்தியுள்ளது. வங்கிக் கடன் பெற்றவர்கள், தவணைத் தொகை அதிகரிப்பால் பாதிக்கக்கூடும்.

15.06.2022 அன்று அமெரிக்க மத்திய வங்கியான பெடரல் ரிசர்வ் (Federal Reserve), 75 புள்ளிகள் அல்லது 0.75% வட்டி விகிதத்தை உயர்த்தி இந்தியாவுடன் இணைந்து கொண்டது. இதைத் தொடர்ந்து, ஐரோப்பிய பிராந்தியத்திலும் பிரிட்டன், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகள் வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தத் தொடங்கிவிட்டன் அல்லது தொடங்கக் காத்திருக்கின்றன.

பணவீக்கத்துக்கு எதிரான இந்தப் போராட்டம், இத்தகைய ஒருங்கிணைந்த மற்றும் ஆக்ரோஷமான கொள்கை முடிவுகள் வெற்றியைத் தருமா என்பது கேள்வி அல்ல் ஆனால், அது மேலும் சிக்கலை ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதே கவலை. வளர்ச்சி அடைந்த மேலைநாடுகளில், கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிதி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடருமா என்பது சந்தேகம். அமெரிக்க மத்திய வங்கியின் அளவுக்கதிகமான வட்டி விகித உயர்வுகள், 'ரிஸஷன்' (Recession) என்று சொல்லப்படும் பொருளாதார மந்தநிலைக்கான அறிகுறியாகத் தெரிகிறது.

அமெரிக்க மத்திய வங்கி அதன் கொள்கை விகிதம் 2022 ஆம் ஆண்டுக்குள் 3.5% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கிறது, இது மார்ச் மாத மதிப்பீட்டை விட 1.5மூ அதிகமாகும். ஆனால், இந்திய ரிசர்வ் வங்கி அத்தகைய கொள்கை விகிதங்களைத் தெளிவுபடுத்தவில்லை. கடந்த மாதம் வட்டி விகிதங்களை சரியான நேரத்தில் உயர்த்தியது. வட்டி விகித உயர்வு என்பது பொருளாதார வளர்ச்சியை மீட்டெடுப்பதற்கான கூர்மையானஆயுதமாக இருக்க வேண்டும். அதே நேரத்தில், பொருளாதார மந்தநிலை காலத்தில் மக்களுக்கு பாரமாகவும் இருந்துவிடக்கூடாது.

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# இடதுசாரிகளுக்கு என்ன ஆயிற்று?



நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது முதலாளித்துவத்தின் உச்சகட்ட ஜனநாயக அமைப்பு முறைகளுள் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. உலகம் முழுவதும் இப்படிப்பட்ட ஜனநாயகம்தான் உள்ளது. வடிவங்கள் மாறினாலும் உள்ளடக்கம் ஒன்றுதான்... அது அமெரிக்காவாக இருந்தாலும் சரி, இந்தியாவாக இருந்தாலும் சரி.

உலகின் பெரும்பாலான நாடுகளில் முதலாளித்துவம்தான் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது. சீனா கொஞ்சம் வித்தியாசமான நாடு. சோஷலிஸ நாடு என்று அதைக் கூற முடியாது. மக்கள் ஜனநாயகப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் நாடாக அதனை நாங்கள் பார்க்கலாம்.

ஆனாலும், அதுவும் முதலாளித்துவம் ஆதிக்கம் செலுத்தும் நாடுதான். இந்திய முதலாளித்துவம் எந்த திசையில் சென்றுகொண்டிருக்கிறது என்பதை நாம் கணித்தால்தான், இடதுசாரிகளின் அரசியல் பலத்தையும் பலவீனத்தையும் நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

சுதந்திர இந்தியாவின் இதுவரையான வரலாற்றை மூன்றாகப் பிரிக்கலாம். 1991இற்கு முன்பு வரை ஒரு காலம். 1991இற்குப் பிறகு அடுத்த காலகட்டம். 2014 மூன்றாவது காலகட்டத்தின் தொடக்கம் என்று கொள்ளலாம். 1991இல் சோவியத் ஒன்றியத்தின் சோஷலிசப் பரிசோதனை தோல்வியடைந்த பிறகு, இந்திய முதலாளி வர்க்கம் குதூகலமாக ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்தது.

அதுதான் அமெரிக்கா சார்பாக இந்தியப் பொருளாதாரத்தை முற்றிலும் திறந்துவிடுவது என்பது. அன்றிலிருந்து இந்தியப் பொருளாதாரம் 2014 வரை பிரம்மிக்கத்தக்க மாற்றத்தை அடைந்தது. புலி தனது இரையைப் பிடிக்கும்போது எந்த அளவு வலுவாகப் பிடிக்குமோ, அதைப் போல் இந்திய முதலாளித்துவம் இந்தியச் சமூகத்தை மிக வலுவாகப் பிடித்தது.

2014இல் நிகழ்ந்தது, ஆட்சியில் அரசியல் கட்சியின் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது எனத் தவறாக நினைத்தவர்கள் அனைவரும், அது அப்படியில்லை என்பதைத் தற்போது உணர்ந்திருப்பார்கள். 1991இல் எப்படி அடிப்படை மாற்றம் நிகழ்ந்ததோ அதைப் போலவே இன்னொரு மாற்றம் நிகழ்ந்த ஆண்டு 2014.

அதன் கூறுகள் இரண்டுதான். ஒன்று, அதிவேகப் பாய்ச்சலுடன் முதலாளித்துவம் ஓட ஆரம்பித்திருக்கிறது. இரண்டு, அந்தப் பாய்ச்சலைக் காப்பாற்ற நாடாளுமன்ற ஜனநாயகத்தை முற்றிலும் மழுங்கடிப்பதும், அதற்குத் துணையாகச் சிறுபான்மை மக்களை வஞ்சிப்பதும் என இரண்டு ஆயுதங்களைக் கையிலெடுத்துக்கொண்டு மத்திய அரசு செயல்படுவதும்.

**கு.பாஸ்கர்**

இதன் விளைவுகளை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். எல்லா மாநிலக் கட்சிகளும் இந்தப் போக்கைப் புரிந்துகொண்டு, அதற்கேற்பத் தங்கள் பாதையை மாற்றியமைத்துக்கொண்டு தங்களை ஸ்திரப்படுத்திக்கொண்டு வருகின்றன. இன்று எல்லாவித குதிரை பேரத்துக்கும் எல்லா மாநிலக் கட்சிகளும் தயாராக உள்ளன. அவர்களுக்குள் வரும் சண்டை சச்சரவுகளெல்லாம் பேரங்களின் ஒரு பகுதிதான்.

ஆனால், மிகப் பெரிய அடையாளச் சிக்கலில் மாட்டிக்கொண்டிருக்கும் ஒரே இயக்கம், இடதுசாரி இயக்கம்தான். நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பயன்படுத்திக்கொண்டு, தங்களை ஓரளவு வலிமைமிக்க சக்தியாக மாற்றிக்கொண்ட இடதுசாரி இயக்கம், இன்று நாடாளுமன்ற ஜனநாயகத்தை அகற்றும் பணியில் முதலாளித்துவம் தன்னை விரைவாக ஈடுபடுத்திக்கொண்டிருப்பதை எதிர்பார்த்திருக்கவில்லை. பொருளாதாரத் துறையிலும் இப்படிப்பட்ட அதிரடி மாற்றங்களையும் இடதுசாரி இயக்கம் எதிர்பார்க்கவில்லை.

இப்படி எதிர்பார்க்காமல் இருந்ததால்தான் எல்லா மாநிலக் கட்சிகளும் சேர்ந்து ஜோதிபாசுவைப் பிரதமராகச் சிபாரிசு செய்தபோது, அதை மார்க்சிஸ்ட் கட்சியின் தலைமை மறுத்துவிட்டது. அவர் பிரதமராகியிருந்தால், ஒருவேளை நாட்டின் தலைவிதி வேறு மாதிரி எழுதப்பட்டிருக்கக்கூடும்.

ஜோதிபாசு அன்று கூறியபடி அது 'வரலாற்றுக் குற்றமாக' மாறிவிட்டது. அதைப் போல, 2008இல் அமெரிக்காவுடன் அணு ஒப்பந்தம் என்ற காரணத்தைக் காட்டி, காங்கிரஸ் அரசுக்கு கொடுத்துவந்த ஆதரவை இடதுசாரிக் கட்சிகள் விலக்கிக்கொண்டது, இது வருங்காலப் போக்கை அவர்களால் கணிக்க முடியவில்லை என்ற உண்மையை உணர்த்துகிறது.

2004இல் 145 மக்களவை இடங்களை மட்டுமே வைத்திருந்த காங்கிரஸ் 2009 தேர்தலில் 204 இடங்களைப் பெற்றது. இடதுசாரிக் கட்சிகள் 68 இடங்களிலிருந்து வெறும் 12 இடங்கள் என்ற வீழ்ச்சியைச் சந்தித்தன. அவற்றின் கோட்டையான மேற்கு வங்கத்தில் மாபெரும் சரிவை எதிர்கொண்டது.

ஒரு கம்யூனிஸ்ட் இயக்கம் நாடாளுமன்றத் தோல்விகளில் தன்னை இழக்காது என்பது சரி என்றாலும், இந்தியா போன்ற மிகப் பெரிய நாட்டில்

தோல்வியிலிருந்து மீண்டுவருவது அவ்வளவு எளிதல்ல. குறிப்பாக, கடந்த 8 ஆண்டுகளில் இடதுசாரிகள் முற்றிலும் எதிர்பார்க்காத மாற்றங்கள் நாட்டில் நிகழ்ந்துவிட்டன. இவற்றை எதிர்கொள்வது இடது இயக்கத்துக்குச் சாத்தியமா என்ற கேள்வி இயல்பாக எழுகிறது.

ஏனென்றால், அதன் சக்தி குறிப்பிட்ட புவி எல்லைகளுக்குள் உள்ளது. இடதுசாரிக் கட்சிகள் இந்திய அரசியலில் குறிப்பிடத்தக்க பங்கை ஆற்றியிருக்கின்றன. இன்று உழைக்கும் மக்கள் பெறும் பல சலுகைகள் அந்தக் கட்சிகளும், அவற்றின் தொழிற்சங்கங்களும் எண்ணற்ற போராட்டங்களை நடத்தியதால் விளைந்தவை என்பது மறுக்க முடியாத உண்மை. அதைப் போல, அவற்றின் தலைவர்களும் தொண்டர்களும் உழைக்கும் மக்களுக்காகத் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள். மிகவும் நேர்மையானவர்கள்.

இன்றும், மக்களுக்காகவும் தொழிலாளர் நலன்களுக்காகவும் போராடிக்கொண்டிருக்கும் இயக்கம் இடதுசாரி இயக்கம் மட்டுமே. அந்த இயக்கத்தின் தலைமையில் மேற்கு வங்கம், திரிபுரா, கேரளம் (ஆட்சியில் இருந்து கொண்டிருக்கிறது) ஆண்ட இடதுசாரிக் கூட்டணி அரசுகள் மக்கள் நலனில் அக்கறையுடன் பணியாற்றின என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

ஆனால், சகலமும் மாறிவரும் சூழ்நிலையில், அதற்கேற்றாற்போல் தன்னை வடிவமைத்துக்கொள்ள இடதுசாரி இயக்கம் தவறிவிட்டதாகத்தான் தோன்றுகிறது. மார்க்ஸியத்தை உள்வாங்கிக்கொண்டு, அதைச் செயலில் காட்டுவதைவிட, மார்க்ஸிய கோஷங்கள் பிரதானப்படுத்தப்படுகின்றன. அறிவின் தேடல் குறைந்துகொண்டே வரும் சூழலில், அதற்கான களத்தை உருவாக்குவதில் இடதுசாரி இயக்கம் அவ்வளவாக இறங்குவதில்லை.

இடது மாற்று என்பது ஒரு நம்பிக்கை அளிக்கும் மாற்றாகக் காட்டப்படாமல், வலது அடிப்படைவாதத்தை வெறும் விமர்சனரீதியில் அணுகுவது எந்தப் பயனும் தராது. ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக வலது இயக்கம் மக்களைப் பிளவுபடுத்தும்போது, அதற்கு எதிரான மாற்றாக மிகப் பெரிய வடிவில் உருவாக வேண்டிய சவாலை எதிர்கொள்ளாமல், இடது மாற்று உடனடிச் சாத்தியமில்லை.

இடதுசாரிகள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்றால், வறட்டுத் தத்துவ இறுக்கங்களிலிருந்தும், ஸ்தாபன இறுக்கங்களிலிருந்தும் வெளிவந்தே ஆக வேண்டும். உலகம் முழுதும் வலதுசாரிகள் உக்கிரமாக முன்னேறிக்கொண்டிருக்கும் சூழலில், இந்திய இடது இயக்கம் தங்களுக்குத் தாங்களே போட்டுக்கொண்டிருக்கும் சங்கிலியை உடைத்தெறிய வேண்டும்.

எதிர்காலத்தில் மக்கள் தங்கள் வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வீதிகளில் இறங்கிப் போராடும் நிலை வரும்போது, அதற்குத் தலைமை வகிக்க இடதுசாரிக் கட்சிகள் இல்லை என்ற அவலநிலை உருவாகாமல் பார்த்துகொள்ள வேண்டியது அவர்களது கடமை.

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

பணவீக்கம், வேலைவாய்ப்பின்மை உள்ளிட்ட பல சவால்களுக்கு இடையேயும் இந்தியப் பொருளாதாரம் மந்தநிலைக்குத் தள்ளப்படவில்லை என்கிற அளவில் நாம் ஆறுதல் அடையலாம். கடந்த நிதியாண்டின் கடைசி காலாண்டில் சற்று பின்தங்கினாலும்கூட, 2021–2022இல் அதிவிரைவில் வளரும் பொருளாதாரமாக இந்தியா தொடர்கிறது. சாதகமான பருவமழையும் அதிகரித்த ஏற்றுமதியும் உதவமானால், தற்போதைய பணவீக்கப் பிரச்னையை பின்னுக்குத் தள்ளி கட்டுக்குள் கொண்டுவந்துவிட முடியும்.

***நன்றி: தினமணி, 22.06.2022***

# இஸ்ரேலுக்கு மீண்டும் அடி! ஏவுகணைகளைத் தடுத்து சிரியா சாகசம்!!

ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக இஸ்ரேல் செலுத்திய ஏவுகணைகளை மறித்துத் தகர்த்தெறிந்து சிரியா சாதனை படைத்துள்ளது. அமெரிக்காவின் ஆதரவுடன் மத்திய ஆசிய நாடுகள் மீது தொடர்ந்து இஸ்ரேல் தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஜூன் மாத முதல் வாரத்தில் பல ஏவுகணைகளை சிரியாவின் தென்பகுதியில் உள்ள சில நகரங்கள் மீது இஸ்ரேல் ஏவியது. அதில் பெரும்பாலான ஏவுகணைகளை சிரியாவின் பாதுகாப்பு கட்டமைப்பு மூலமாக மறித்துத் தகர்த்தெறிந்தனர். இந்த எதிர்வினை இஸ்ரேலுக்கு மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிற்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. சொந்தமாகவே, அந்நிய நாடுகளின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் பலம் சிரியாவிற்கு உள்ளது என்பதையே இது எடுத்துக்காட்டியது.

இந்நிலையில், சில் நாட்களின் பின்னர் மீண்டும் எதிர்பாராத வேளையில் தனது ஏவுகணைகளை இஸ்ரேல் ஏவியிருக்கிறது. ஆனால், எந்நேரமும் இதுபோன்ற தாக்குதல்கள் நிகழலாம் என்று எதிர்பார்த்திருந்த சிரியா, கிட்டத்தட்ட அனைத்து ஏவுகணைகளையும் மறித்து தகர்த்தது. தடுப்பை மீறி சில ஏவுகணைகள் சிரியாவின் பகுதிகளுக்குள் விழுந்திருந்தாலும் உயிர்சேதமோ, பொருட்சேதமோ ஏற்படவில்லையெனத் தெரிகிறது.

இதுபோன்ற தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துங்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளருக்கும், ஐ.நா. சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் தலைவருக்கும் சிரியா கடிதம் எழுதியிருந்தது. அதில், "சிரியா மீது இஸ்ரேல் தொடுக்கும் தாக்குதல்கள் ஐக்கிய நாடுகள் சபையின் கோட்பாடுகளுக்கு மாறாக இருக்கிறது. அப்படியிருக்கையில் இந்தத் தாக்குதல்கள் குறித்து ஒரு தெளிவான கருத்தை ஐக்கிய நாடுகள் சபையும், பாதுகாப்புக் கவுன்சிலும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்" என்று கோரப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டிலிருந்தே பயங்கரவாதிகளின் வெறியாட்டத்தில் சிரியா சிக்கியிருந்தது. தக்பிரி பயங்கரவாத அமைப்பு சிரியாவின் வளங்களைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியது. இந்த பயங்கரவாத அமைப்புக்கு அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அவர்களின் கூட்டாளிகள் ஆதரவு இருக்கின்றது. ரஷ்யா மற்றும் லெபனானின் ஹஸ்புல்லா அமைப்பு ஆகியவற்றின் உதவியோடு பயங்கரவாதிகளை ஒடுக்குவதில் சிரியா வெற்றி கண்டது. பயங்கரவாதிகளை முன்னிறுத்தி, சிரியாவின் சில பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றி வைத்துள்ளது. அந்தப் பகுதிகளில் இருந்துதான் இஸ்ரேல் ஏவுகணைகளை சிரியா மீது ஏவி வருகின்றது.

# தள்ளுபடி விலையில் ரஷ்யாவின் கச்சா எண்ணெயை வாங்கி பெரும் இலாபம் ஈட்டும் இந்திய தனியார் நிறுவனங்கள்



**இ**ந்திய கச்சா எண்ணெய் இறக்குமதியில் சவூதி அரேபியாவை பின்னுக்குத் தள்ளி, ரஷ்யா 2வது இடத்திற்கு வந்துள்ளது. இந்தியாவில் உள்ள தனியார் எண்ணெய் நிறுவனங்கள், தள்ளுபடி விலையில் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்கி சுத்திகரித்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெரும் இலாபம் ஈட்டி வருகின்றன. இந்த வாய்ப்பு அதிகமாக இந்தியன் ஒயில், பாரத் பெட்ரோலியம் போன்ற இந்திய அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கு கிடைக்கவில்லை.

உக்ரைன் – ரஷ்யா யுத்தத்தால் உலகம் முழுவதுமே பொருளாதார அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளது. இதனால் தங்கம், கச்சா எண்ணெய்யின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளது. உக்ரைன் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் வாங்க அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் மறுத்துள்ளதால், ரஷ்யா மலிவு விலையில் கச்சா எண்ணெய்யை விற்பனை செய்கிறது.

இதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்ட இந்தியா, ரஷ்யாவிடம் இருந்து அதிகபடியான கச்சா எண்ணெய் வாங்கி வருகின்றது. உரல்ஸ் தரத்திலான கச்சா எண்ணெய் 35 டொலர்கள் தள்ளுபடி விலையில் இந்தியாவுக்கு ரஷ்யா விற்பனை செய்கிறது. டொலர் இல்லாமல், ரூபிள்– ரூபாய் மதிப்பில் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. இதனால் மலிவான விலையில் இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் கிடைத்து வருகிறது.

**ரஷ்யாவின் கச்சா எண்ணெய்**

மே மாதத்தில் ரஷ்யாவில் இருந்து இந்தியா இறக்குமதி செய்துள்ள கச்சா எண்ணெய் சாதனை அளவை எட்டியுள்ளது. மே மாதத்தில் ஒரு நாளைக்கு 840,645 பீப்பாய்கள் ரஷ்ய கச்சா எண்ணெய்யை இந்தியா இறக்குமதி செய்துள்ளது. இது ஏப்ரலில் 388,666 பீப்பாய்களாக இருந்தது.

இதனால் மே மாதத்தில், இந்தியாவுக்கு மிக அதிக அளவு கச்சா எண்ணெய் விற்பனை செய்த நாடுகளின் வரிசையில் 2வது இடத்துக்கு ரஷ்யா முன்னேறியுள்ளது. இந்தியாவுக்கு அதிகளவு கச்சா எண்ணெய் விற்பனை செய்த நாடுகள் வரிசையில் தொடர்ந்து முதலிடத்தில் ஈராக் உள்ளது.

இதுவரை இரண்டாமிடத்தில் இருந்த சவூதி அரேபியா தற்போது மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதற்கு முன்பு போக்குவரத்து செலவு அதிகமாக இருந்ததால், ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை இந்திய நிறுவனங்கள் வாங்குவது குறைவாக இருந்தது. தற்போது அதிகமான தள்ளுபடி விலையில் கிடைப்பதால் இந்திய நிறுவனங்கள் ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெயை அதிகளவில் இறக்குமதி செய்து வருகின்றன.

***நெல்லை ஜெனா***

ரஷ்யாவிடமிருந்து இந்தியா இறக்குமதி செய்த மொத்த கச்சா எண்ணெய் அளவு மே மாதத்தில் சுமார் 16.5 சதவீதமாகும். ஜூன் மாதத்தில் இது மேலும் உயரக்கூடும். ஜூன் மாத இறக்குமதி 1.05 மில்லியன் பீப்பாய்கள் என்ற உச்ச எண்ணிக்கையை தொடுமென நம்பப்படுகின்றது.

பெஞ்ச்மார்க் ப்ரெண்ட் கச்சா எண்ணெய் (Benchmark brent crude oil) ஒரு பீப்பாய் 30 டொலர் விலைக்கும் குறைவாகவே ரஷ்யா வழங்குகிறது. இதனால் இந்தியாவின் அரசு எண்ணெய் நிறுவனங்கள் மட்டுமின்றி ரிலையன்ஸ் உள்ளிட்ட தனியார் நிறுவனங்களும் பெரும் இலாபம் ஈட்டி வருகின்றன.

**இலாபம் ஈட்டும் இந்திய தனியார் நிறுவனங்கள்**

தனியார் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் (Reliance Industry) குஜராத் மாநிலம் ஜாம் நகரில் (Jamnagar) 1.2 மில்லியன் பரல்கள் திறன் கொண்ட சுத்திகரிப்பு வளாகத்தை இயக்குகிறது. வெளிநாடுகளில் இருந்து கச்சா எண்ணெயை வாங்கி அதனை பிரித்தெடுத்து பெட்ரோல், டீசல் மற்றும் பெட்ரோலிய பொருட்களாக பெரும்பகுதியை ஏற்றுமதி செய்கிறது.

சிக்கா துறைமுகம் (Sikka Port) ரிலையன்ஸின் கச்சா எண்ணெய் இறக்குமதியைக் கையாளுகிறது. மே மாதத்தில் 10.81 மில்லியன் பீப்பாய்கள் ரஷ்ய கச்சா எண்ணெய் இந்த நிறுவனத்துக்கு வந்துள்ளது. இதனை ரிலையன்ஸ் நிறுவனம் சுத்திகரித்து இதே துறைமுகத்தில் இருந்து 2.0 மில்லியன் பீப்பாய்கள் டீசலை மே மாதத்தில் அவுஸ்திரேலியாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளது.

மே மாதத்தில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸின் ஒட்டுமொத்த கச்சா இறக்குமதியில் ரஷ்ய எண்ணெயின் பங்கு ஐந்தில் ஒரு பங்காக உயர்ந்தது. தள்ளுபடி விலையில் கிடைத்த ரஷ்ய

எண்ணெயை அதிகளவில் ரிலையன்ஸ் நிறுவனம் இறக்குமதி செய்துள்ளது.

ரிலையன்ஸ், மே மாதத்தில் ஒரு நாளைக்கு சுமார் 1.4 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெயை இறக்குமதி செய்துள்ளது. இது ஏப்ரல் மாதத்தில் இருந்து 9.1 சதவீதம் அதிகமாகும். அதேசமயம் சவூதி அரேபியா உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ரிலையன்ஸ் இறக்குமதி செய்த கச்சா எண்ணெயின் அளவு ஏப்ரல் மாதத்தில் 67% லிருந்து 61% ஆக குறைந்துள்ளது,

ரஷ்யாவில் இருந்து இறக்குமதி 13 சதவீதத்தில் இருந்து 23 சதவீதமாக உயர்ந்துள்ளது. மே மாதத்தில் அமெரிக்க கச்சா எண்ணெய் வாங்குவதை ரிலையன்ஸ் நிறுவனம் முற்றிலுமாக தவிர்த்து விட்டது. அதற்கு பதிலாக தள்ளுபடி விலையில் ரஷ்யாவில் இருந்து தொடர்ந்து வாங்கி வருகின்றது. ரிலையன்ஸ் நிறுவனத்தை பொறுத்தவரையில், வாங்கிய கச்சா எண்ணெயில் பெருமளவை சுத்திகரித்து ஐரோப்பிய நாடுகளுக்கே ஏற்றுமதி செய்துள்ளது. அதாவது

சிக்கா துறைமுகத்தில் இருந்து ரிலையன்ஸ் நிறுவனம் மே மாதத்தில் ஐரோப்பாவிற்கு 2.56 மில்லியன் பீப்பாய்கள் டீசலை ஏற்றுமதி செய்துள்ளது. ஏப்ரல் மாதம் 890,000 பீப்பாய்கள் பெட்ரோலை அமெரிக்காவிற்கு அனுப்பியது. இவை ரஷ்யாவில் வாங்கப்பட்டு, ரிலையன்ஸ் நிறுவனத்தின் மூலம், ரஷ்யாவிலிருந்து கச்சா எண்ணெய் வாங்க மறுக்கும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ரிலையன்ஸ் மட்டுமல்லாமல் இந்தியாவின் இரண்டாவது பெரிய சுத்திகரிப்பு ஆலையை இயக்கும் நயாரா எனேர்ஜி (Nayara Energy) நிறுவனமாகும். ரஷ்ய கச்சா எண்ணெயில் இருந்து தயாரிக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை ஏற்றுமதி செய்வது ரிலையன்ஸ் மட்டுமல்ல நயாரா நிறுவனமும் செய்கின்றது.

நயாரா, ரஷ்யாவின் ரோஸ்நேபிட்டின் (Rosneft) துணை நிறுவனத்திற்கும், சரக்கு வர்த்தகரான ட்ராபிகுராவின் (Trafigura) துணை நிறுவனத்திற்கும் சொந்தமானது. இது குஜராத்தின் வாடினாரில் (Vadinar) சுத்திகரிப்பு ஆலையை நடத்தி வருகிறது.இந்த துறைமுகம் மே மாதத்தில் அவுஸ்திரேலியாவிற்கு 340,000 பீப்பாய்கள் டீசலை ஏற்றுமதி செய்தது, இது நயாராவால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதனால் ரஷ்யா கச்சா எண்ணெய்க்கு தடை விதித்ததால் இந்திய நிறுவனங்கள் மட்டுமே இலாபம் ஈட்டி வருவதாக ஐரோப்பிய நாடுகள் ஏற்கெனவே கவலை தெரிவித்துள்ளன.

இந்தியாவில் தனியார் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களின் மொத்த ஏற்றுமதியை 2021 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுடன் ஒப்பிட்டால் தற்போது 15% அதிகமாக உயர்ந்துள்ளன. ஏற்றுமதி செய்வதால் அதிக லாபம் கிடைப்பதால் தனியார் நிறுவனங்கள் உள்ளூர் விற்பனையை குறைத்துள்ளன.

அதிக அளவு சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல், டீசல் ஏற்றுமதி செய்யும் வகையில் தனியார் சுத்திகரிப்பு நிறுவனங்கள் உள்நாட்டு எரிபொருள் விற்பனையின் சந்தைப் பங்கை ஏப்ரல் மாதத்தில் 7% ஆகக் குறைத்துள்ளன. மார்ச் மாதத்தில் இது 10% ஆக இருந்தது.

**இந்திய அரசு எண்ணெய் நிறுவனங்கள்**

அதேசமயம் இந்தியன் ஒயில் (Indian Oil), பாரத் பெட்ரோலியம் (Bharath Petroleum) போன்ற அரசு எண்ணெய் நிறுவனங்கள் உள்நாட்டு விற்பனைக்கு தேவையானவற்றை வழங்க வேண்டிய கட்டாயம் உள்ளது. ஏற்றுமதியை ஒப்பிடுகையில், டீசல் விற்பனையில் லீட்டருக்கு 20 ரூபாய்க்கும் அதிகமாகவும், பெட்ரோல் லீட்டருக்கு 17 ரூபாய்க்கும் மேல் இந்திய அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

அரசு எண்ணெய் நிறுவனங்கள் ஒவ்வொரு சமையல் எரிவாயு சிலிண்டரிலும் 200 ரூபாய்க்கு மேல் இழக்கின்றன. இருப்பினும் உள்நாட்டு தேவைக்காக அவை விற்பனை செய்து வருகின்றன. அதேசமயம் தனியார் நிறுவனங்களுக்கு அந்த நிர்பந்தம் இல்லை என்பதால் அவை உள்நாட்டு விற்பனையை குறைத்துக் கொண்டு அதிகளவில் ஏற்றுமதி செய்துள்ளன.

**பொற்காலம்**

இதுகுறித்து ஐ.சி.ஐ.சி.ஐ சந்தை ஆராய்ச்சி நிறுவனம் கூறுகையில் "இது இந்திய தனியார் கச்சா எண்ணெய் சுத்திகரிப்பாளர்களுக்கு பொற்காலம். ஆனால் இந்தியாவில் அரசு சுத்திகரிப்பு நிறுவனங்களின் நிலை எதிர்மறையாக உள்ளது. இந்திய சந்தையில் எவ்வளவு அதிகமாக விற்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நஷ்டம் ஏற்படும் என்பதை தனியார் நிறுவனங்கள் புரிந்து கொண்டுள்ளன." என தெரிவித்துள்ளது.

# முதலில் பொருளாதார ஸ்திரம் அதன் பின்னரே புதிய தேர்தல்

முதலில் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னரே புதிய தேர்தலை நடத்த முடியுமென இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள தற்போதைய பொருளாதார பின்னடைவுக்கு மத்தியில், அரசாங்கம் உறுதியான பொருளாதார அடித்தளத்தை ஏற்படுத்தினால் மட்டுமே புதிய தேர்தலை நடத்த முடியும் என்றார். 23.06.2022 அன்று விசேட அறிக்கை மூலம் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மிக முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டவுடன், பொருத்தமான 225 பிரதிநிதிகளை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்வதற்கு பொதுமக்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமெனவும், அவர்களை தெரிவு செய்யும் பொறுப்பும் அதிகாரமும் பொது மக்களுக்குள்ளது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடியைச் சமாளிக்க நாட்டின் பிரஜை ஒவ்வொருவரும் ஒன்றுபட வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கூறியுள்ளதுடன், அரசியல்வாதிகள் மற்றும் மக்களிடமிருந்து அர்ப்பணிப்பை எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அவ்வாறு காணப்பட்டால் மட்டுமே உலக நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வருமென பிரதமர் மேலும் கூறினார்.

அத்துடன் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் நாம் உறுதியாக உள்ளோம் என்பதை அரசியல்வாதிகளும், ஒட்டுமொத்த மக்களும் உலகுக்கு நிரூபிக்க வேண்டுமெனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். எனவே நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்துக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்குமாறு பிரதமர் அனைவரிடமும் கேட்டுக் கொண்டுள்ளார்.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

(குறிப்பாக ஜே.ஆர். அரசு 1977 இல் திறந்த பொருளாதாரம் என்ற பெயரில் அறிமுகப்படுத்திய நவ தாராளவாதக் கொள்கை) ஏனெனில், இவர்கள் எல்லோரும் கூட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகளாக முன்னர் ஆட்சியதிகாரத்தில் இருந்து கோலோச்சியவர்கள்தான்.

அதுவுமல்லாமல், இன்றைய பொருளாதார நெருக்கடியை தாம் ஆட்சிக்கு வந்தால் எப்படித் தீர்த்து வைப்பார்கள் என்பதை ஆட்சிக்கு வரத் துடிக்கும் சஜித் பிரேமதாசவோ, சந்திரிகவோ அல்லது ஜே.வி.பியினரோ கூறும் நிலைமையிலும் இல்லை. ஏனெனில், அவர்களது முழு நோக்கமும் ராஜபக்சாக்களுக்கு எதிராக பொய்யான அவதூறுப் பிரச்சாரங்களைச் செய்து, குறுக்கு வழியில் ஆட்சிக்கு வருவதேயொழிய, மற்றும்படி அவர்களிடம் உருப்படியான பொருளாதாரத் திட்டங்களோ அல்லது தூரநோக்கோ எதுவும் கிடையாது. உதாரணமாக, முன்னர் இவர்களுடன் இணைந்து நின்று அரசுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வந்த ரணில் விக்கிரமசிங்க தற்பொழுது நாட்டின் பிரதமராக வந்து என்ன மாற்றத்தைச் செய்துவிட்டார். அதுவும் இவர்கள் எல்லோரையும் விட மேற்கு நாடுகளுக்கு மிகவும் வேண்டிய விசுவாசியான ரணிலால் கூட எதையும் சாதிக்க முடியவில்லை. ஏனெனில் அவரிடமும் ஒரு திட்டமும் கிடையாது. அப்படியிருக்கையில், இந்த வாய்ப்பந்தல் வீரர்களால் என்னத்தைச் சாதிக்க முடியும்?

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் இப்பொழுது எல்லோரும் ஏகோபித்த முறையில் சர்வரோக நிவாரணியாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடி நிற்கின்றனர். சர்வதேச நாணய நிதியம் ஒரு ஏகாதிபத்திய வட்டிக்கடை என்பதைப் புரிந்து கொண்டு, முன்னர் அதன் உதவியை நாடுவதை எதிர்த்தவர்களும் கூட, இன்று அதன் உதவியைப் பெறுவதில் தவறில்லை என கருத்துத் தெரிவிக்கின்றனர். இதில் விநோதம் என்னவெனில், முன்னர் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதைக் கடுமையாக எதிர்த்து வந்த இடதுசாரிக் கட்சிகள் கூட இப்பொழுது இலங்கை அரசாங்கம் அந்த நிறுவனங்களின் உதவியை நாடியது குறித்து மௌனம் சாதித்து வருகின்றன.

இலங்கை அரசு ஒரு நவ காலனித்துவ முதலாளித்துவ அரசு என்ற வகையில் தனது கையறு நிலையில் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் உதவியை நாடி நிற்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்ற போதிலும், அவர்களின் உதவியைப் பெறுவது மட்டும் ஒரேயொரு நிரந்தரத் தீர்வாகிவிட முடியுமா? அத்துடன் எவ்வளவு காலத்துக்கு இந்த நிறுவனங்கள் இலங்கைக்கு தொடர்ந்து நிதி உதவியை வழங்க முடியும்? அது மட்டுமின்றி அந்த நிறுவனங்கள் நிதி வழங்குவதற்கு முன்வைக்கப் போகும் நிபந்தனைகளை இலங்கையால் தாங்க முடியுமா?

குறிப்பாக அவர்கள் தற்பொழுது மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் சேமநலத் திட்டங்களை நிறுத்தச் சொல்வார்கள். அதாவது, இலவச கல்வி, இலவச மருத்துவம் என்பனவற்றை நிறுத்தச் சொல்வார்கள். ஏழை மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டு வரும் சமுர்த்திக் கொடுப்பனவை நிறுத்தச் சொல்வார்கள். அரச ஊழியர்களின் தொகையை சரி பாதியாகக் குறைக்கச் சொல்வார்கள். போக்குவரத்துக் கட்டணங்களை உயர்த்தச் சொல்வார்கள். விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் வழங்கப்பட்டு வரும் மானியங்களை நிறுத்தச் சொல்வார்கள். குளங்கள் சீரமைப்பு, நெடுஞ்சாலைகள் புனரமைப்பு போன்ற கட்டுமான வேலைகளை நிறுத்த அல்லது குறைக்கக் கோருவார்கள். வரிகளை அதிகரிக்கச் சொல்வார்கள். இப்படி இன்னும் பல நிபந்தனைகளை அவர்கள் முன்வைப்பதற்கு வாய்ப்புண்டு.

அவர்கள் முன்வைக்கப் போகும் நிபந்தனைகளை ஏற்றால் மக்களின் கதி என்ன? மக்களின் வாழ்க்கை இன்றிருப்பதை விட மோசமான ஒரு நிலையை அடையாதா? இன்றைய நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் "கோத்தா கோ கோம்" என உரத்துக் கூச்சல் போடுபவர்கள், அப்பொழுது யாரை வீட்டுக்குப் போகுமாறு கோசம் எழுப்புவார்கள்?

இந்த இடத்தில் ஒரு வரலாற்று உதாரணத்தைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும். 1953 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்க தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தது. அந்த ஆட்சியில் மிகுந்த அமெரிக்க விசுவாசியான ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிதியமைச்சராக இருந்தார். அப்பொழுதும் நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அந்த நெருக்கடியைத் தீர்க்க அரசாங்கம் உலக வங்கியின் உதவியை நாடியது. அவர்கள் உதவி செய்வதற்கு சில நிபந்தனைகளை முன்வைத்தனர்.

அந்த நிபந்தனைகளின்படி, 25 சதமாக இருந்த ஒரு இறாத்தல் அரிசியின் விலை 75 சதமாக அதிகரிக்கப்பட்டது. தபால் – தந்தி மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன. பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வந்த மதிய போசனம் நிறுத்தப்பட்டது. இப்படி இன்னும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உலக வங்கியின் நிபந்தனையால் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் மக்களைக் கடுமையாகப் பாதித்ததால் அவர்கள் கோபாவேசம் கொண்டார்கள்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து 1953 ஆகஸ்ட் 12 ஆம் திகதி நாடு தழுவிய ஹர்த்தால் போராட்டத்துக்கு தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்தன. மக்கள் முழுமையாகப் போராட்டத்தில் குதித்ததால் நாடே ஸ்தம்பித்தது. அரசாங்கத்தால் நாட்டின் எந்தப் பகுதியிலும் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. இறுதியாக கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற ஒரு பிரித்தானிய கடற்படைக் கப்பலில் அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டிய பின்னர் டட்லி சேனநாயக்க தனது பிரதமர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு அரசை விட்டு வெளியேறினார்.

தற்போதும் அத்தகைய ஒரு சூழ்நிலைதான் நாட்டில் நிலவுகின்றது. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்று மக்களின் நலன்களில் கை வைத்தால் மீண்டும் ஒரு 1953 ஆகஸ்ட் 12 ஹர்த்தால் போராட்டம் நிகழாது எனக் கூற முடியாது. சில வேளைகளில் வரலாறு திரும்ப திருப்ப நிகழ்வதை நாம் கண்டிருக்கிறோம்.

உண்மையில் இலங்கை போன்ற நில வளம், நீர் வளம், கடல் வளம், மலை – காடு வளம், மனித வளம் போன்றவற்றை அபரிமிதமாகக் கொண்டிருக்கும் ஒரு நாடு, சர்வதேச நாணய நிதியம் போன்ற கொடுமையான ஏகாதிபத்திய வட்டிக்கடைக்காரனிடம் உதவி கோருவது ஒரு நிரந்தரமான தீர்வல்ல. தனது வளங்களைப் பயன்படுத்தி சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே ஒரேயொரு தீர்வாக இருக்க முடியும்.

# சரிவடைகிறது பிரித்தானியாவின் பொருளாதாரம்

**2023** ஆம் ஆண்டில் பிரிட்டனின் பொருளாதாரம் சரிவடையும் என்று ஆய்வொன்றில் கிடைத்த புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இது குறித்த புள்ளிவிபரத்தை பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (Organisation for Economic Co-operation and Development - OECD) வெளியிட்டிருக்கிறது. கொரோனா பெருந்தொற்றிலிருந்து பிரிட்டன் மீண்டு வந்து கொண்டிருந்தது. அந்த மீட்சியைக் காலி செய்யும் வகையில் தற்போதைய நிகழ்வுகள் உள்ளன என்று அந்த அமைப்பு கூறியுள்ளது. பிரிட்டன் மட்டுமல்ல, பல்வேறு நாடுகள் மோசமான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றன என்று எச்சரிக்கிறார்கள்.

2021 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபரங்களை வெளியிட்டே வருங்காலம் எப்படி இருக்கலாம் என்று கணித்திருக்கிறார்கள். தற்போதைய நிலையில் பிரிட்டனை விட, ஜப்பான், ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்படப் போகின்றன. ஜப்பான்தான் பெரும் அடி வாங்கப் போகிறது. இருந்தாலும், 2023 ஆம் ஆண்டில் பிரிட்டனின் பொருளாதார வளர்ச்சியே இருக்காது என்று கணித்துள்ளனர். அதே வேளையில், ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளின் வளர்ச்சி 1.6 விழுக்காடாக இருக்கும்.

சிறப்பு நடவடிக்கை என்று ரஷ்யாவால் அழைக்கப்படும் உக்ரைன் மீதான தாக்குதல்களுக்கு எதிராகத் தடைகளைப் போடுவதற்கான வேலைகளை பிரிட்டன்தான் முன்நின்று பார்த்துக் கொண்டது. ரஷ்யாவின் எரிவாயு மற்றும் எண்ணெய் வளத்தை குறைந்த அளவே பிரிட்டன் நம்பியிருப்பதால், ரஷ்யாவை தனிமைப்படுத்த வேண்டும் என்று பலத்த குரலில் கோரி வருகிறது. ஆனால், உலகம் முழுவதும் ஏற்பட்ட பாதிப்பு பிரிட்டனை விட்டுவைக்கவில்லை. மேலும், வரலாறு காணாத பணவீக்கத்தை நோக்கி பிரிட்டன் பொருளாதாரம் சென்று கொண்டிருக்கிறது.

இது குறித்து பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பின் பொதுச் செயலாளரான மத்தியாஸ் கோர்மன் (Mathias Cormann) கூறுகையில், 'உலகம் முழுவதும் பண்டங்களின் விலைகள் கடுமையாக எகிறியுள்ளன. இதனால் பணவீக்கம் கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகிறது. வருமானம் மற்றும் செலவினம் ஆகிய இரண்டிற்கும் ஏராளமான தடைக்கற்கள் போடப்படுகின்றன. இது மீட்சியைத் தாமதப்படுத்துகிறது' என்றார். உணவு தானிய உற்பத்தியில் முன்னணியில் இருக்கும் உக்ரைன், தனது இருப்பை ஏற்றுமதி செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது. அதுவும் விலையேற்றத்திற்கு இட்டுச் சென்றுள்ளது.



## *பெரும் போராட்டங்களுக்குத் தயாராகிறது பிரித்தானியா கம்யூனிஸ்ட் கட்சி*

கொரோனா, உக்ரைன் நெருக்கடி மற்றும் அமெரிக்காவின் தூண்டுதல்கள் ஆகியவற்றால் கடுமையான பணவீக்கத்தைச் சந்தித்து வரும் பிரிட்டனில் பெரும் போராட்டங்களுக்கு பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் தயாராகி வருகிறார்கள். மக்கள் சந்திப்பு, தொழிலாளர்களுடன் கலந்துரையாடல் என்று பல்வேறு வழிகளில் பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சி கருத்துக்களை சேகரித்து வந்தது. நெருக்கடி பற்றி மக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என்ன நினைக்கின்றன என்பது பற்றியும், அடுத்த கட்டமாக எத்தகைய வழிகளைக் கையாள வேண்டும் என்றும் பிரிட்டன் கம்யூனிஸ்ட் கட்சி விவாதங்களை நடத்திக் கொண்டிருக்கிறது.

இதன் ஒருபகுதியாக, அக்கட்சியின் அரசியல் குழுவின் கூட்டமும் கூடி விவாதித்திருக்கிறது. கட்சியின் மூத்த நிர்வாகிகளில் ஒருவரான அண்டி பெய்ன் (Andy Bain) அறிக்கையொன்றை முன்வைத்து விவாதத்தைத் தொடங்கினார். தனது உரையின் தொடக்கத்திலேயே வலதுசாரி அரசு மற்றும் பெரு நிறுவனங்களின் கொள்கைகளுக்கு எதிராக ஒன்றுபட்டு போராட்டங்களை நடத்த வேண்டும் என்று அண்மைக்காலத்தில் தொழிற்சங்கங்கள் வெளியிட்ட அறிக்கைகளை வரவேற்றுப் பேசினார். அனைத்துப் பகுதி தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டு நிற்க வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். மேலும் பேசிய அவர், "விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. ஆட்சியில் உள்ளவர்களோ புதிய சட்டங்கள் மூலமாக மக்களைப் பிரித்து போராட்டங்களை மட்டுப்படுத்த முயல்கின்றார்கள். அவர்களுக்குள்ளும் முரண்பாடுகள் உள்ளன. போரிஸ் ஜான்சன் இனிமேலும் நமக்கு உதவுவாரா என்று அவர்களுக்குள் விவாதிக்கிறார்கள், மோதிக் கொள்கிறார்கள். ஆனால் தங்களுக்கு எதிராக சவால் விடும் தொழிலாளர்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்து கொள்கிறார்கள்" என்றார்.

"தொழிற்சங்கங்கள், மக்கள் பேரவைகள், தொழிலாளர் கட்சியின் அமைப்புகள், பெண்கள் மற்றும் ஓய்வூதியர் பிரச்சாரங்கள், சுகாதார மற்றும் வீட்டுவசதிப் போராளிகள், மாணவர் சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளை நாங்கள் திரட்ட வேண்டும். இந்தப் போராட்டங்கள் அடுத்த பொதுத் தேர்தல் வரையில் நீடிக்குமாறு பார்த்துக் கொள்வது அவசியம்" என்று மேலும் அண்டி பெய்ன் கூறினார்.